# விடுதலைப்புலிகள்

குரல்: 49 | வைகாசி - 1994 | அன்பளிப்பு: 5/-


# பாதுகாப்புச் செலவீனங்கள்

# அரசு எதிர்கொள்ளும் நெருக்கடிகள்

## பாதுகாப்பு அமைச்சு மேலதிக நிதியாக 1100 கோடிரூபா கோருகின்றது

உட்கட்சிப் பிரச்சினையால் எழுந்த அரசியல் நெருக்கடிகளிலிருந்து ஆளும் ஐ. தே கட்சி முழுமையாக, மீள முன்னர், அது பெரும் நிதி நெருக்கடியிலும் சிக்கிக்கொண்டுள்ளது.

வருட இறுதியில் வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு சிங்கள வாக்காளர்களைக் கவர்வதற்காகப் பல சலுகை நிவாரணங்களைச் சிங்கள மக்களுக்கு வழங்க, அரசு முடிவெடுத்துள்ளது இதற்கு ஏறக்குறைய 1500 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பணத்தை ஒதுக்கிக்கொடுபபதில் திறைசேரி திண்டாடுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், திடீரென பாதுகாப்பு அமைச்சும் பெருந்தொகை நிதியை மேலதிக போர்ச்செலவாகத் தரும்படி அரசிடம் அவசர வேண்டுகோள் விடுத்திருப்பது திறைசேரி வட்டாரத்தில் திகைப்பை ஏற்படுத்தியுள்ளது.

1994இற்கான அதாவது இவ்வருடத்திற்கான - போர்ச்செலவாக, அரசு ஏற்கெனவே 2100 கோடி ரூபா பணத்தை ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. வருடத்தின் அரைப்பங்குகூடக் கழியாத இந்த நிலையில், மேலும் 1100 கோடி ரூபாவைப் பாதுகாப்பு அமைச்சு கேட்டிருப்பது, சிங்கள மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வளவு பெருந்தொகைப்பணம் மேலதிகமாகக் கேட்கப்படுவது ஏன் என்ற கேள்வியும், இங்கே எழுகின்றது.

ஒரு பெரும்போருக்கான முன் தயாரிப்பு வேலையாக, பெருமளவு போராயுதங்களை அரசு ஏற்கெனவே கொள்வனவு செய்துவிட்டது. அதற்குப் பெருமளவு பணத்தையும் பாதுகாப்பு அமைச்சு செலவளித்துவிட்டது அதனால் தான் இத்திடீர் பணப்பற்றாக்குறை பாதுகாப்பு அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ள மேலதிக நிதியைக் கொடுக்க முடியாது திறைசேரி தத்தளிப்பது, டி.பி விஜேதுங்கா அரசுக்குக் கவலையைக் கொடுத்துள்ளது.

படைத்துறை உயர்பீடம் கேட்பதைக் கொடுத்துப் போரை வெல்வதிலேயே ஜனாதிபதி விஜேதுங்காவும் குறியாக இருக்கின்றார். இதனால் எப்படியாவது பாதுகாப்பு அமைச்சு கோரிய நிதியை வழங்குவதிலேயே அவர் முனைப்பாக உள்ளார்.

திறைசேரியின் விருப்பத்திற்கு மாறாக மேலதிக பணநோட்டுக்களை அச்சடித்து இந்தப் பண நெருக்கடியைத் தீர்க்க டி. பி விஜேதுங்கா முயல்கின்றார் என, 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை கூறியுள்ளது. ஆனால் இந்த முயற்சி, பொருளியல் நிபுணர்களின் கடுங் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது. இந்த முயற்சி நாட்டின் பணவீக்கத்தை அதிகரிக்கச்செய்வதுடன், பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தி நாட்டைக் குட்டிச்சுவராககிவிடும் என்றும். அவர்கள் அரசை எச்சரித்துள்ளனர்.

இந்தநிலையில்தான், வருட இறுதியில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவையும் திறைசேரி ஒதுக்கவேண்டிய நிலையில் உள்ளது.

இந்த நிதிப்பிரச்சினை அரசுக்கு பெருந்தலையிடியைக் கொடுப்பதுடன், பொருளாதார நெருக்கடியையும் ஏற்படுத்திவிட்டுள்ளது என்று, அரசியல் அவதானிகள் கருத்துக் கூறியுள்ளனர். ○

## உள்ளே


- சீதன அரக்கனுடன் ஒரு சொற்போர் — விளக்கம்
- தமிழீழ வைப்பகம்; தனியரசுக்கான அலகு — அறிமுகம்
- "பொன் விளைவித்த வேளாண் மன்னர்கள்" — தலைவர் வாழ்த்து
- தமிழரின் தாயகம்; ஒரு வரலாற்று ஆவணம்
- நிமிர்ந்த பனை; லெப். கேணல் சூட் — போராளியின் குருதிச் சுவடுகள்
- தென்னாபிரிக்கா; வரலாற்று வெற்றி — வாழ்த்து
- விஜேதுங்காவின் ஒரு வருட ஆட்சி — நோக்கு




தேசியத் தலைவன் மெல்லக் குனிந்தணைக்க, தேசத்தின் பிஞ்சிங்கு சொல்லத் துடிப்பதென்ன?

"எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக, ஒரு புதிய இளம்பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும்."


**தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு**

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

# சீதன அரக்கனுடன் ஒரு சொற்போர்!

குடும்பங்களிடமிருந்து அவற்றின் பெண்பிள்ளைகளுக்கு இயல்பாகவே போய்ச்சேரவேண்டிய சொத்துப் பரிமாற்றம் இங்கே, பெண்களின் திருமண வாழ்வையே தீர்மானிக்கும் ஒரு பேரப்பொருளாக மாற்றப்பட்டு, பெண்களுக்கு எதிரான ஒரு ஒடுக்குமுறை வடிவமாக கீழ்மைப்படுத்தப்பட்டுவிட்டது.

சீதனம் என்ற பெயரில் நடைபெறும் இந்தச் சமூக அநீதிக்கு எதிராக சொற்போர் தொடுத்து, மக்கள் மத்தியில் ஒரு கருத்துப் புரட்சியைத் தோற்றுவிக்க புலிகள் இயக்கம் பாடுபடுகின்றது.

தமிழீழத்தில் சொத்துரிமையானது தாய்வழிச் சொத்துரிமையென்ற மரபிற்கிணங்க பெண்வழிமூலமே கைமாற்றப்பட்டு வருவது, எமது இனத்தின் ஒரு சிறப்பு. இது தமிழீழப் பெண்களுக்கு ஒரு பெரிய பலம். எமது பண்பாட்டின் ஒரு நல்ல அம்சம். இந்தியாவிலோ அல்லது மேலை நாடுகளிலோ இந்தச் சிறப்புரிமைகளைப் பெண்கள் கொண்டிருக்கவில்லை. இப்போதுதான் நீண்ட போராட்டங்களின் பின், அங்கெல்லாம் பெண்கள் சொத்துரிமைக்கு உரித்துடையவர்கள் எனப் புதிய சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் தமிழீழ சமுதாயத்தில் சொத்துரிமையானது பெண்களுக்கே உரித்தான சிறப்புரிமையாக, நீண்ட காலமாகவே இருந்துவருகின்றது. ஆனால் அந்தச் சிறப்புரிமைமீது ஒரு ஆண் – அது கணவனோ, தந்தையோ, சகோகரனோ – தனது செல்வாக்கை திணித்துவைத்திருப்பதையும் ஆணுலகம் மனச்சாட்சிப்படியாவது ஏற்றுக்கொள்ள வேண்டும்.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை தமிழீழப் பெண்களுக்கிருக்கும் இந்தச் சிறப்புரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதில், அது உறுதியாக இருக்கின்றது.

ஆனால் ஒரு பெண்ணுக்கு திருமணம் என்று வரும்போது இந்தச் சொத்தோ அல்லது பணமோ – பொருளோ அவளுடைய திருமண வாழ்வைத் தீர்மானிக்கும் நிர்ணய சக்தியாக மாறுவதைப் பெண்களுக்கெதிரான ஒரு கொடூரமான ஒடுக்குமுறையாகவே நாம் பார்க்கின்றோம். ஆண்மேலாதிக்கச் சிந்தனை பெற்றெடுத்த இந்தச் சமூக அநீதி நிச்சயம் ஒழிக்கப்படவேண்டும். அப்போதுதான் ஆண் – பெண்களுக்கிடையே சம அந்தஸ்தும், சமத்துவமான வாழ்வும் ஏற்பட வாய்ப்பேற்படும். அதாவது பணத்துக்கும் – சொத்துக்கும் அப்பால் திருமண வாழ்வு தீமானிக்கப்படவேண்டும். திருமண உறவுகளின் அத்திவாரம் ஆண் – பெண், புரிந்துணர்வில் – அன்புறவில் இடப்பட்டிருக்கவேண்டும்; பணத்திலும் – சொத்திலும் அல்ல.

சீதனக் கொடுமை எமது சமூகத்தில் ஊறிப்போய்விட்ட ஒரு சமூக அநீதி என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்.

'இவ்வளவு சொத்தும்', 'இவ்வளவு பணமும்', இவ்வளவு பொருளும்' இருந்தால்தான் இந்தத் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிப்போம் என்று ஆண் வீட்டார் வற்புறுத்திக் கேட்பது ஒரு அநாகரிகம்; ஒரு அசிங்கமான பேரம். இது பெண்மையை இழிவுபடுத்தும் ஒரு சித்தாந்தம்.

வீரமும் – தியாகமும் தேசப்பற்றும் கொண்டு, மானுட வாழ்வின் அதி உயர் சிகரமாகிய விடுதலையைத் தொட முயலும் எமது இனத்தின் இத்தகைய ஒரு அவமானச் சின்னத்திற்கு நாம் இனியும் இடம் கொடுக்கலாமா? கூடாது.

சீதனத்திற்கு எதிரான பிரச்சாரம் என்றவுடன் சிலர் அதை ஜீரணிக்கத் தயங்குகின்றனர். அதாவது இயல்பான சொத்து மாற்றத்தை சீதனத்துடன் போட்டுக் குழப்பி, தாமும் குழப்பமடைகின்றனர்.

வற்புறுத்தலோ நிர்ப்பந்தமோ ஏதுமில்லாமல், தமிழீழ தேசவழமைச் சட்டத்தின்படி பெற்றோர் தமது சொத்துக்களைப் பெண்பிள்ளைகளுக்கு மாற்றுவதை நாம் எதிர்க்கவில்லை. இந்தச் சொத்து மாற்றத்திற்கும் சீதன எதிர்ப்பு பிரச்சாரத்திற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. ஆனால் சீதனம் என்ற பெயரில் பொருளோ, சொத்தோ, பணமோ பெண் வீட்டாரிடமிருந்து நேரடியாகவோ – மறைமுகமாகவோ வற்புறுத்திப் பெறுவதையே நாம் எதிர்க்கின்றோம். அதற்கெதிராகவே சொற்போர் தொடுத்துள்ளோம்.

இந்தக் கட்டாயச் சீதனத்தால் பெண்கள் உளரீதியான பாதிப்புகளையும் திருமண வாழ்வில் பல சிக்கல்களையும் எதிர்கொள்கின்றனர். பல்லாயிரம் பெண்கள் திருமண வாழ்வில் நுழையமுடியாது தடுக்கப்பட்டும் உள்ளனர். அதேவேளை இந்த நடைமுறையால் பெண்களின் தந்தைமார், சகோதரர்கள் என்றவகையில் ஆண்களும் பல்வகைப் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர்.

அப்படியாயின் ஏன் இன்னமும் எமது சமூகம் இந்தப் பிற்போக்கான – எல்லோரையும் வருத்துகின்ற - மரபை விடாப்பிடியாகப் பின்பற்றி நிற்கின்றது.

மிகப் பெரும்பாலான மக்கள் இந்த சமூக அநீதியை விரும்பவில்லை; விரும்பாமலே இந்த மரபைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அதாவது கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டிய ஒரு சமூக விதியாக சீதனத்தைப் பலர் நோக்குகின்றனர். சிலர் இதை ஒரு சமூக அந்தஸ்தாகவும் கருதுகின்றனர். இதனாலேயே இந்த அநாகரிகமான வழக்கத்தை - மரபை - மக்கள் தொடர்ந்தும் கடைப்பிடிக்க முயல்கின்றனர்.

இந்தச் சீதன வழக்கத்துக்கு எதிராக, விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் இப்போது பிரச்சாரப் போரைத் தொடுத்திருக்கின்றார்கள்; பல்வேறு இடங்களுக்கும் சென்று, மக்களின் பல்வேறு பகுதியினருடனும் கலந்துரையாடி – அவர்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்று வருகின்றனர். இந்த நல்ல நோக்கத்தை உணர்ந்தபடி மக்கள் இதற்கு ஒத்துழைப்பும் – பங்களிப்பும் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

பிறக்கப்போகும் தமிழீழ புதிய சமுதாயம் ஆண் – பெண் சமத்துவம் நிறைந்ததாக, மகிழ்ச்சியான குடும்பவாழ்வைக் கொண்டதாக, மானிடத்தின் உயர் விழுமியங்களைக் கடைப்பிடிப்பதாக அமைய வேண்டும் என்பதே எமது குறிக்கோள். ○

# தமிழீழ வைப்பகம் : தனியரசுக்கான அலகுகளில் ஒன்று

## எமது மக்களின் பணம் எமது மக்களுக்கே பயன்படவேண்டும்

"தமிழீழ மக்களின் பொருண்மிய மேம்பாட்டுக்கு வைப்பகங்களின் தேவை அவசியம்'' என்ற தலைவரின் கூற்று, 23. 05. 1994 அன்று யாழ். கன்னாதிட்டியில் செயல் வடிவம் எடுத்துவிட்டது. தமிழீழத்தின் முதலாவது வைப்பகம் அன்று திறந்துவைக்கப்பட்டது. இதேபோன்று இன்னும் பல வைப்பகங்கள் திறக்கப்பட இருக்கின்றன. இந்த வைப்பகங்களின் இயக்கமும் அதன் சேவையும் தமிழீழ தேசிய பொருண்மியத்திற்கு உறுதுணையாக அமையப்போகின்றன என்பது உறுதி. எமது மக்களின் பணமும் எமது மண்ணின் வளமும் ஒரு காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களால், முழுமூச்சுடன் எமது இனத்திற்கெதிராகவே பயன்படுத்தப்பட்டு வந்தன என்பது அறியப்பட்ட உண்மை; இன்னமும் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை.


எமது மக்களின் பணம் எமது மக்களின் வாழ்வு முயற்சிக்குப் பயன்படவிடாது தடுப்பதுடன், சுதந்திரமான பணப்புழக்கத்திற்கு இடைஞ்சலையும் ஏற்படுத்தி, எமது மக்களுக்குத் தொல்லை கொடுப்பதில், சிங்கள அரசு திட்டமிட்டுச் செயற்படுகின்றது. அதாவது தமிழீழ மக்களின் பணத்தையும் - தமிழ் மக்களிடையேயான பணப்புழக்கத்தையும் சிங்கள அரசு ஒரு போராயுதமாக எடுத்து தமிழினத்திற்கெதிராகப் பயன்படுத்தி வருகின்றது.

சிங்கள அரசின் இந்த திட்டமிட்ட நாசவேலையை, தமிழீழ வைப்பகம் படிப்படியாக இல்லாமல் செய்யும்.

இதையேதான் வைப்பகத் திறப்புவிழாவில் பேசிய நிதித்துறைப் பொறுப்பாளர் திரு தமிழேந்தி அவர்கள்...... '' இங்கிருந்து கொழும்புக்கு அனுப்பப்படும் நிதி எமது மக்களின் வாழ்வோட்டத்தைப் பாதிப்பதுடன், எமது மக்களை அழிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது'' என்று சுருக்கமாகக் கூறியிருந்தார்.

காவல்துறை மற்றும் நீதிமன்றங்களின் செயற்பாட்டைப்போல வைப்பகத்தின் செயற்பாடும் தனியரசுக்கான கட்டுமானங்களில் ஒரு முக்கிய அலகாகத் தொழிற்படும் என்பது திண்ணம்.

வைப்பகத்தின் திறப்புவிழா அன்றே பல் நூற்றுக்கணக்கான தமிழீழ குடிமக்கள் பணத்தை வைப்புச் செய்வதில் காட்டிய ஆர்வம் தமிழீழ வைப்பகத்திற்கு கிடைக்கப்போகும் மக்களின் பலத்த ஆதரவையும் - அங்கீகாரத்தையுமே காட்டிநிற்கின்றது. ○



-தேசியக்கொடியை ஏற்றி திறப்புவிழாவை ஆரம்பித்துவைக்கும் திரு. தமிழேந்தி அவர்கள்

# "அரசியல்வாதிகளது தலைமையில் நடைபெறும் கூட்டங்களுக்கு நான் போகமாட்டேன்"

**— புத்தளம் கடற்படைக் கொமாண்டர்**

## விஜேதுங்கா குழுவினர்க்கும் சிங்கள தளபதிகள் சிலருக்கும் இடையில் முறுகல்

உயர் படைத்தளபதிகள் சிலருக்கும் ஜனாதிபதி விஜேதுங்கா உட்பட ஆளும் கட்சியின் ஒரு குழுவினர்க்கும இடையில், பகைமை உணர்வைத் தூண்டும் வகையில் முரண்பாடுகள் எழுந்துள்ளன. இதன் காரணமாக, இதுவரை நாளும் பேரினவாத அரங்கில் உற்ற நண்பர்களாக உலாவந்த விஜேதுங்காவின் சகாக்களுக்கும் சிங்கள உயர் தளபதிகள் சிலருக்கும் இடையில் இப்போது, ஒரு வகைப் 'பனிப்போர்' நிலவுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கற்பிட்டி மீனவர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக அண்மையில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. இக்கூட்டத்தில் அரசின் பிரதிநிதிகளும் படைத்தளபதிகளும் உரையாற்றவிருந்தனர். ஆனால் இக் கூட்டததிற்கு ஏற்கெனவே உறுதியளித்தபடி, புத்தளம் மாவட்ட கடற்படைக் கொமாண்டரும் சமூகமளிக்கவில்லை; கற்பிட்டி மீனவர்களது பாதுகாப்பு தொடர்பான குழுவின் தலைவரான பிரிகேடியர் குலரத்னாவும் சமூகமளித்திருக்கவில்லை (ஐலன்ட் - 4, மே 94). கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத்சந்திர குணரட்ணா மாத்திரம் சமூகமளித்திருந்தார். படைத்தளபதிகள் சமூகமளிக்கத் தவறியதை இந்த அரசுப் பிரதிநிதி கடுமையாகக் கண்டித்திருந்தார்.

இது படைத்தளபதிகளுக்கும் ஆளும் கட்சிப பிரமுகர்களுக்கும் இடையில் உள்ள 'பனிப்போரைத்' தெளிவாகக் காட்டுகின்றது.

இது தொடர்பாக புத்தளம் கடற்படைக் கொமாண்டர் கூறும்போது...... "அரசியலவாதிகளது தலைமையில் நடைபெறும் கூட்டங்களுக்கு நான் போகமாட்டேன்" என்று. பகிரங்கமாகவே செய்தியாளர்களிடம் கூறியுள்ளார் ( ஐலன்ட் - 4, மே 94 ).

விஜேதுங்கா அரசைக் கவிழ்க்க, கிழக்கு மாகாண சிங்களத் தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவுடன் இணைந்து திரு. சிறிசேனகூரே சதித்திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளார் என்று, சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி, விஜேதுங்காவை உலுக்கியெடுத்துவிட்டது.

இச்சதித்திட்டச் செய்தி வெளியான கையோடு தனது சீன விஜயத்தையே இரத்துச்செய்யும் அளவுக்கு, இச் செய்திக்கு விஜேதுங்கா மிக முக்கியத்துவம் கொடுத்திருந்தார்.

இச்சதிமுயற்சி தொடர்பான செய்தியை சிறிசேனகூரேயும், லக்கி அல்கமவும் உடனடியாகவே மறுத்திருந்தனர். ஆனாலும் சதிபறறிய இசசெய்தி விஜேதுங்கா குழுவினர் மத்தியில், படைத்தளபதிகள் பற்றிய ஒரு சந்தேக விதையைத் தூவிவிட்டதென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். கற்பிட்டிக் கூட்டம் இதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

விஜேதுங்காவின் தலைமைத்துவம் தொடர்பாக ஆளும் கட்சிக்குள் ஒரு பகுதியினர் அதிருப்தி அடைந்துள்ளனர். விஜேதுங்கா நிருவாகப் புலமையோ, முடிவெடுக்கும் திறனோ அல்லது மக்களைக் கவர்ந்திழுக்கும் வல்லமையோ இல்லாதவர் என்பது, அவர்களது ஆணித்தரமான கருத்து. இதனால், ஆட்சியை நிர்ணயிககப்பாகும் அடுத்த தேர்தலில் ஐ. தே. கட்சி தோல்வியடையலாம் என்று, அவர்கள் அஞ்சுகின்றனர்.

அதேவேளை, சிக்கலானதும் - சர்வதேசமயப்பட்டுவிட்டதுமான தமிழரின் இனப்பிரச்சினையை உலக சமூகம் அங்கீகரிக்கும்வகையில் சரியாகக் கையாளவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டுடன், சிங்கள தேசத்தினது அரசியல் - பொருளாதார - சமூக வாழ்வையும் அவர் கீழ் நிலைக்குக் கொண்டுசெல்கின்றார் என்ற கோபமும், கொழும்பில் பரவலாகக் காணப்படுகின்றது. தென்மாகாணசபைத் தேர்தல் களத்தில் சிங்கள மக்களாலேயே விஜேதுங்காவின் தலைமைத்துவம் நிராகரிக்கப்பட்டமை, மேற்குறித்த கருத்தை உடையவர்களது கரத்தை வலுப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் விஜேதுங்காவால் ஓரங்கட்டப்பட்ட பிரேமதாசாவின் சகபாடியான சிறிசேனகூரேயும், பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் அவருக்கு விசுவாசமாக இருந்து- ஜே. வி. பியினரை படுகொலை செய்து - அதன் காரணமாக முன்னணிக்கு வந்த லக்கி அல்கமவும் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைப் பிடிக்க சதி முயற்சியில் ஈடுபட இருந்தனர் என்ற செய்தியில், வியப்பேதும் இல்லை.

இச்சதி முயற்சியில் மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவும் சம்பந்தப்பட்டிருந்தார் என்ற செய்தியை, எவரும் சாதாரண செய்தியாக எடுக்கமாட்டார்கள்.

தற்போதைய கிழக்கு மாகாண கொமாண்டராகப்பணியாற்றிவரும் லக்கி அல்கம அதேவேளை, இராணுவத்தின் பிரதம அதிகாரியாகவும் (Chief of Staff) பதவி வகிக்கின்றார். அதாவது, தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி. டி. சில்வாவிற்குப் பின்பு, லக்கி அல்கமவே அடுத்த இராணுவத் தளபதியாக வரக்கூடியவர் அத்தகைய உயர் நிலையிலுள்ள ஒருவர் இந்தச் சதி முயற்சியுடன் சம்பந்தப்பட்டிருப்பது, அரசியல் அவதானிகளிடம் ஒரு கேள்வியை உருவாக்கியுள்ளது.

அதாவது, சிறீலங்காவில் இராணுவ ஆட்சிக்குரிய சூழல் உருவாகின்றதா என்பதே அதுவாகும்!

இது ஒருபுறமிருக்க, இந்த இரு பகுதியினருக்கும் இடையிலான முரண்பாடுகள், தற்போதைய படையெடுப்பு முயற்சிகளில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. படையினர் தமது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டபடியே உள்ளனர். படிப்படியாக மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள்மூலம் வட புலம்மீது படையெடுப்புத் தொடங்கிவிட்டது என்று, சிங்களத் தளபதிகள் வெளிப்படையாகக் கூறியுள்ளனர். ○

# "எனக்குக் கால்வழங்காத குறையை அகற்றியவன்"

**ஒரு மாவீரனின் சகோதரியினது உள்ளத்து உணர்வு**

என் ஆசைத்தம்பி ராஜன்... எனக்கு இரண்டு வயதானபோது எங்கள் தாய் உன்னைப்பெற்றெடுத்தார். பிறப்பிலிருந்தே நான் நடக்கமுடியாதவள். எனது ஐந்து வயதில் நீ சிறியவனாக இருந்தபொழுதே நீ அழுகின்ற நேரத்தில் உன்னை என்மடி மீது வைத்து விளையாட்டுக் காட்டுவேன். அம்மா வீட்டு வேலைகளைக் கவனிக்கும் பொழுது உன்னைப் பார்க்கும்படி எனக்குச் சொல்வார். அப்பொழுது நீ நன்றாக நடப்பாய்; ஓடுவாய். என் அருகில் நீ வரும்போது உன்னை இறுகப் பிடித்துவிட்டால் என்னை அடித்துவிட்டு ஓடுவாய். என்னால் நடக்கவும் முடியாது. ஓடவும் முடியாது.

"என்னைப் பிடி அக்கா" என்பாய்.

என்னால் எப்படிப் பிடிக்க முடியும்? நான் அழுவேன். அப்பொழுது நீ ஓடிவந்து "ஏன் அக்காஅழுகிறாய்" என்று கேட்பாய்?

என்னால் உன்னைப் பிடிக்க முடியவில்லையே என்று சொல்லி அழுவேன்.

"ஏன் அக்கா உன்னால் ஓடமுடியாது" என்று கேட்பாய். "அது எனக்குத் தெரியாது" என்பேன்.

நீ ஏழு வயதை அடையும்வரை எனக்கு சகல கடமைகளையும் அம்மாவே செய்து வந்தார்.

உனது ஏழு வயதிலிருந்து எனக்கான சகல கடமைகளையும் நீ செய்யத்தொடங்கினாய்.

மூன்று சில்லு சைக்கிளில் என்னை வைத்து அங்குமிங்கும் உருட்டித் திரிந்து, நான் நடக்கமுடியாத குறையைப் போக்கினாய். என் கால்களாக இயங்கினாய். என்னால் நடக்கமுடியவில்லை என்ற துயரம் என்னிடம் நீங்க, எனக்குத் தம்பியாக இல்லையடா அண்ணனாகத் திகழ்ந்தாய். உன்னை என் உயிராக நேசித்தேன். நீயே நான்; நானே நீயென இருந்தோம்.

சிறு வயதினில் நாம் விளையாடிய பொழுது ஒருநாள் நடந்த சம்பவத்தை, என்னால் உயிருள்ள வரையில் மறக்க முடியாதடா. என்னை வீட்டுக்குள் சைக்கிளில் தள்ளிச் சென்றாய். நான் கொஞ்சம் உடல் பருமனானவள். தள்ளுவதற்குக் கொஞ்சம் உனக்குக் கஷ்டமாக இருந்தது அந்த நேரத்தில்:

"இந்தக் குண்டை வைச்சுத் தள்ள ஏலாது" என்று சற்று விலகிச்சென்றாய்.



**லெப். மயூரன்**

**(சண்முகராசா செந்தில்ராஜ்)**

பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

*01-03-1994 அன்று பூநகரி - கௌதாரி முனைப் பகுதியில் நடந்த எதிர்பாராத நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.*

அப்போது அருகிலிருந்த மேசைமீதிலிருந்த மேசைக்கத்தியை எடுத்து எறிந்தேன். கத்தி உன் தோள்மீது பட்டது. உன் தோளிலிருந்து இரத்தம் பாய்ந்தது. அதன்பின் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. கண்விழித்துப் பார்த்தேன். நான் படுக்கையில் இருந்தேன். பக்கத்தில் அம்மாவும் நீயும் இருந்தீர்கள். உனது இடது தோளில் துணி கட்டப்பட்டிருந்தது அப்போது......

"அக்கா அக்கா! இனிமேல்உன்னைக் குண்டு என்று சொல்லமாட்டேன். எவ்வளவு தூரம் எண்டாலும் உன்னை சைக்கிலிலைவைச்சுத் தள்ளுறன். எழும்பக்கா. நான் குண்டு என்று சொன்னபடியால்தானே நீ மயங்கிப்போனாய்" என்று அழுதாய்.

நான் கனவு கண்டதுபோல் இருந்தது. நான் இரத்தத்தைக்கண்டு சைக்கிளில் இருந்து மயங்கி விழுந்துவிட்டேன் என்று சொன்ன பொழுதுதான், என்ன நடந்தது என்று எனக்குத் தெரிந்தது.

என் முன்கோபத்தால் நான் செய்தகுற்றத்தையும் மறந்து, நான் மயங்கியதைக் கண்டு எனக்காக நீ அழுத காட்சியை, எப்படியடா என்னால் மறக்கமுடியும் ?

நாங்கள் இருவரும் தசையும் நகமும் போல வளர்ந்து வந்தோம்.

கடந்த ஐந்து வருடத்திற்கு முன், எமது விடுதலைக்காக உன்னை நீ இணைத்துக் கொண்டாய். அன்றிலிருந்து எனது சைக்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் தாயகம்: ஒரு வரலாற்று ஆவணம்

இந்திய உபகண்டத்தின் தெற்கே இந்து மா சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய தீவான இலங்கையில், இற்றைக்கு ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் யாழ்ப்பாண அரசு, கோட்டை அரசு, கண்டி அரசு என அழைக்கப்பட்ட மூன்று அரசுகளும் பல வன்னிச் சிற்றரசுகளும் இருந்தன. யாழ்ப்பாண அரசின் கீழும் வன்னிச் சிற்றரசுகளின் கீழும் இருந்து வந்த நிலப்பகுதியானது தற்போதைய வடக்கு, கிழக்கு மாகாணங்களையும் வடமேற்கு மாகாணத்தின் சில பகுதிகளையும் (புத்தளம் மாவட்டம்) உள்ளடக்கியதாக இருந்தது.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கீசரின் வருகையைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட ஐரோப்பியரின் ஆதிக்கத்தின் விளைவாக, இந்த அரசுகள் தமது தனித்துவங்களை இழக்கலாயின. 16 ஆம் நூற்றாண்டின் இறுதியில்- அதாவது 1597 ஆம் ஆண்டு- சிங்களவரின் இராச்சியமாகிய கோட்டை அரசு போர்த்துக்கீசர் வசமாகியது 1619 ஆம் ஆண்டு, தமிழரின் இராச்சியமாகிய யாழ்ப்பாண அரசு போர்த்துக்கீசரால் கைப்பற்றப்பட்டது. கண்டி அரசுதான் இறுதிவரை போர்த்துக்கீசரால் வெல்லப்பட முடியாத அரசாக இருந்தது. போர்த்துக்கீசரின் ஆட்சிக்காலம் (1505 - 1658) 1658 ஆம் ஆண்டு டச்சுக்காரரின் வருகையைத் தொடர்ந்து முடிவுற்றது.

சி. வரதராஜன் (B.A)

1658ஆம் ஆண்டு மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களை போர்த்துக்கீசரிடமிருந்து டச்சுக்காரர் கைப்பற்றினர். போர்த்துக்கீசர், டச்சுக்காரர் ஆகியோர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தபோதிலும்கூட, அவர்கள் தமிழ்ப் பிரதேசங்களையும் சிங்களப் பிரதேசங்களையும் ஒன்றாக இணைக்கவில்லை. டச்சுக்காரர் தமது ஆட்சிக்காலத்தில் தமது ஆதிக்கத்தின் கீழிருந்த இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை மூன்று நீதி மாவட்டங்களாகப் பிரித்தனர்.

1. யாழ்ப்பாண நீதி மாவட்டம்.
2. கொழும்பு நீதி மாவட்டம்.
3. காலி நீதி மாவட்டம்.

இதன்படி தற்போதைய வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழர் பிரதேசங்கள் முழுவதும் யாழ்ப்பாண நீதி மாவட்டம் என்ற பெயரில் ஒரே பிரதேசமாகவே டச்சுக்காரரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது (படம்-1).

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் டச்சுக்காரரின் ஆட்சிக்காலம் (1658 - 1796) முடிவடைந்து, ஆங்கிலேயரின் ஆதிக்கம் இத்தீவில் உதயமாகியது. ஆரம்பத்தில் இலங்கைத் தீவின் கரையோரப் பிரதேசங்களே ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்தன.

எனினும் 1815ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் ஆங்கிலேயராற் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கைத் தீவு முழுவதும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டது. இவ்வாறு இலங்கைத் தீவு முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்த ஆங்கிலேய ஆட்சியாளர்கூட, ஆரம்பத்தில் தமிழ்ப் பிரதேசங்களையும் சிங்களப் பிரதேசங்களையும் ஒன்றாக இணைக்கவில்லை. கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் என்பன தனித்தனி நிர்வாகப் பிரிவுகளாக ஒரு பிரதேசத்துடன் இன்னொன்று இணைக்கப்படாமலேயே இருந்தன.

1831 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் போது இலங்கையில் மூன்று நிர்வாகப் பிரதேசங்கள் இருந்தன என்பதனை, அக்குடிசன மதிப்பீட்டுத் தகவல்கள் காட்டுகின்றன. 1831 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டுத் தரவுகளின் சுருக்கம் பின்வருமாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | தமிழ் மாவட்டங்கள் : | 213641 பேர் |
| | அ) யாழ்ப்பாணம் | 146528 ,, |
| | ஆ) திருகோணமலை | 16335 ,, |
| | இ) மட்டக்களப்பு | 27574 ,, |
| | ஈ) மன்னார் | 20257 ,, |
| | உ) நெடுந்தீவு | 2947 ,, |
| 2. | சிங்கள மாவட்டங்கள்: | 448361 பேர் |
| | அ) கொழும்பு | 234791 ,, |
| | ஆ) காலி | 88242 ,, |
| | இ) தங்காலை | 95582 ,, |
| | ஈ) சிலாபம் | 29746 ,, |
| 3. | கண்டிய மாகாணங்கள்: | 288486 பேர் |
| | | 950488 |

இதன்படி 1831 ஆம் ஆண்டளவில் இலங்கையில் மூன்று தனி நிர்வாகப் பிரதேசங்கள் இருந்தன என்பதும், தமிழர் பிரதேசங்கள் அனைத்தும் ஒரே பிரதேசமாக இணைந்திருந்தன என்பதும் புலனாகின்றது. 1834 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'சிலோன் கசெற்றியர்' (Ceylon Gazetteer) என்ற நூலில், தமிழர் பிரதேசங்களும் சிங்களவர் பிரதேசங்களும் தெளிவாக வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளன.

''தமிழர்கள் இலங்கையின் வடக்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் வாழ்கின்றனர். இவர்களது மாவட்டங்கள் குமுக்கன் ஆறு தொடக்கம் யாழ்ப்பாணத்தைச் சுற்றி புத்தளம் வரையில் பரந்துள்ளது.''

(குறிப்பு:- குமுக்கன் ஆறு என்பது தற்போதைய கிழக்கு மாகாணத்தினதும் தென்மாகாணத்தினதும் எல்லையில் அமைந்துள்ளது.)

''சிங்களவர்கள் இலங்கையின் உட்பகுதியில் அமைந்துள்ள மாவட்டங்களிலும் குமுக்கன் ஆறு தொடக்கம் வடக்கே சிலாபம் வரையுள்ள கரையோரப் பிரதேசங்களிலும் வாழ்கின்றனர்.''

1796 ஆம் ஆண்டு இலங்கை 'பிரித்தானியர் ஆட்சிக்கு உட்பட்ட போதிலும், 1833ஆம் ஆண்டு வரை தமிழர் பிரதேசங்கள் ஒரு தனி நிர்வாகப் பிரதேசமாகவே இருந்து வந்தது. 1833ஆம் ஆண்டு கோல்புறூக் - கமரன் அரசியல் திட்ட அறிக்கையினைத் தொடர்ந்தே, இலங்கைத்தீவின் மாகாண - மாவட்ட எல்லைகள் ஆங்கிலேய ஆட்சியாளரால் நிர்ணயிக்கப்பட்டவையாகும். சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, வருமான சேகரிப்பு, செலவினைக் குறைத்தல் போன்ற நோக்கங்கள் கருதி காலனித்துவ ஆட்சியில் இந்நிர்வாக எல்லைகள் தீர்மானிக்கப்பட்டன.

இவற்றிற்கும் மேலாக கண்டிய மாகாணங்களின் தனித்துவத்தினை அழிப்பதும் ஆங்கிலேய அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. 1818ஆம் ஆண்டுக் கண்டிக் கலவரமும் அதனைத் தொடர்ந்த மக்கள் எழுச்சியும், ஆங்கிலேய ஆட்சியாளர்களின் மனதில் பாதுகாப்பற்ற உணர்வு ஒன்றினை ஏற்படுத்திற்று. இதனால் கரந்தடிப் போர்முறையில் ஆற்றல் கொண்டிருந்த விடுதலை வீரர்களின் புகலிடமாக இருந்த மத்திய மலைநாட்டை, இலங்கையின் கரையோரப் பிரதேசங்களோடு இணைப்பது என அரசாங்கம் தீர்மானித்தது. இதன் மூலம் கண்டி மாகாணங்களில் காணப்பட்ட விடுதலைப் போராளிகளின் கிராமிய பொருளாதாரத்தினைச் சிதைக்க முடியும் என ஆங்கிலேய அரசாங்கம் கருதியது.

கோல்புறூக் - கமரன் ஆணைக்குழுவின் சிபாரிசுக்கமைய 1. 10. 1833 இல், இலங்கையில் ஐந்து மாகாணங்கள் உருவாக்கப்பட்டன (படம் - 2).

1. வடமாகாணம்
2. கிழக்கு மாகாணம்
3. மேல்மாகாணம்
4. தென்மாகாணம்
5. மத்திய மாகாணம்


வடமாகாணம் பின்வரும் பிரதேசங்களை உள்ளடக்கியிருந்தது.

1. யாழ்ப்பாணம்
2. நெடுந்தீவு
3. மன்னார்
4. வன்னி
5. நுவரகலாவிய (அனுராதபுரம்)


கிழக்கு மாகாணம் பின்வரும் பிரதேசங்களை உள்ளடக்கியிருந்தது.

1. மட்டக்களப்பு
2. திருகோணமலை
3. பிந்தன
4. தமன்கடுவ (பொலநறுவை)


1. 9. 1873 இல் வடமாகாணத்திலிருந்த நுவரகலாவிய மாவட்டமும் (தற்போது அநுராதபுரம் மாவட்டம்) கிழக்கு மாகாணத்திலிருந்த தமன்கடுவ மாவட்டமும் (தற்போது பொலநறுவை மாவட்டம்) ஒன்றிணைக்கப்பட்டு, வடமத்திய மாகாணம் உருவாக்கப்பட்டது. 5. 2. 1886இல் ஊவா மாகாணம் உருவாக்கப்பட்டபோது, கிழக்கு மாகாணத்திலிருந்த பிந்தன பிரதேசம் ஊவா மாகாணத்தோடு சேர்க்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தற்போதைய வட மாகாண, கிழக்கு மாகாண எல்லைகள் உருவாகின (படம் - 3). ○




படம்: 1




படம்: 2




படம்: 3

# ஆளும் கட்சிக்குள் தோன்றியுள்ள நெருக்கடி

பலகாலமாகவே ஐ. தே. கட்சிக்குள் இருந்துவந்த உள் முரண்பாடுகள் இப்போது சந்திக்கு வரத் தொடங்கியுள்ளன. இந்த உள் முரண்பாடுகளிலிருந்து தனது தலைமையைத் தப்பவைக்க டி. பி. விஜேதுங்கா எடுத்துவரும் சில நடவடிக்கைகள், ஐ. தே. கட்சிக்குள் மேலும் நெருக்கடிகளைக் கொடுத்துள்ளன.

தென்மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. கட்சி படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து, இந்த உள் முரண்பாடுகள் உச்சக்கட்டத்திற்குச் சென்றன.

பிரேமதாசாவின் கொள்கைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படாததுதான் இந்தத் தேர்தற் தோல்விக்குப் பிரதான காரணம் என்று, ஐ. தே. கட்சிக்குள் ஒரு பகுதியினர் கூறினர்.

இன்னொரு பகுதியினர் விஜேதுங்காவின் பலவீனமான தலைமைத்துவம்தான் தேர்தற் தோல்விக்குக் காரணம் என்று கூறினர்.

ஆனால் உண்மையான காரணம் ஐ. தே. கட்சிக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியுள்ள அதிருப்தியும் - விரக்தியும்தான் என்பதை, ஐ. தே. கட்சி தலைமைப்பீடம் ஏற்க விரும்பவில்லை. பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறும் இந்தப் போரின் பக்க விளைவுகளால் எழுந்ததுதான், சிங்கள மக்களின் இந்தச் சீற்றம் என்பதே உண்மையாகும்.

தமிழரின் இனப்பிரச்சினையை அரசியல் வழிமூலம் தீர்க்கமுயலாது இராணுவ வழிகளைக் கடைப்பிடித்து உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்ததுடன், இனப்பிரச்சினையை பூதாகரமாக மாற்றிவிட்டது ஐ. தே. கட்சி அரசாங்கம்தான். சமூக முன்னேற்றத்திற்கும் - அபிவிருத்திக்கும் - கல்விக்கும் செலவளிக்கவேண்டிய பணத்தைப் போருக்குச் செலவிட்டு, சிறீலங்காவில் ஒரு சமூகப் பிரச்சினையையும்- பொருளாதார நெருக்கடிகளையும் ஐ. தே. கட்சி அரசு ஏற்படுத்தியது. இவ்விதம் மக்களின் நன்மைக்காகச் செலவளிக்கப்படவேண்டிய பணத்தைப் போரில் செலவிட்ட பொழுதிலும், போரையாவது அரசு வென்றதா என்றால் அதுவுமில்லை. பல்லாயிரம் சிங்கள இளைஞர்களைச் சாகடித்து, ஆயிரக்கணக்கானவர்களை அங்கவீனர்களாக்கி, சிங்கள மக்களுக்கு சோகக் கதைகளையே ஐ. தே. கட்சி ஆட்சி பரிசாகக் கொடுத்தது. இந்தத்துயர ஆட்சிக்குப் பிரதியுபகாரமாக தென்மாகாணச் சிங்கள மக்கள் தேர்தற் தோல்வியைப் பரிசளித்தனர்.

இந்த அடிப்படை உண்மையை ஏற்றுக்கொண்டு, இனப்பிரச்சினையை அரசியல் வழிமூலம் தீர்த்து. அதன்மூலம் சிங்கள தேசத்தின் ஏனைய சமூக பொருளாதாரப் பிரச்சினைகளையும் தீர்த்து சிங்கள மக்களது ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, ஐ.தே கட்சியின் தலைமைப்பீடம் குழுச்சண்டையில் இறங்கியுள்ளது.

டி. பி. விஜேதுங்கா அவர்கள் கட்சிக்குள் தனது நிலையை உறுதிப்படுத்தும் எண்ணத்துடனும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை வெல்வதற்கேற்ற தந்திரோபாயத்துடனும், காமினி திசாநாயக்காவை மீண்டும் கட்சியில் சேர்த்துள்ளார். கண்டிப் பிரபுத்துவ வர்க்கத்தைச் சேர்ந்த காமினியை நாடாளுமன்ற உறுப்பினராக்கி, பின் அவரை அமைச்சரவைக்குள் சேர்த்துக்கொண்டு, அவரைக் கேடயமாகவும் - ஈட்டியாகவும் பயன்படுத்திக் கட்சிக்குள் எழும் எதிர்ப்புகளை வெற்றிகொள்ள முடியும் என்று விஜேதுங்கா நம்புகின்றார்.

இதற்கு உடன்பட மறுத்த கட்சிச் செயலாளரும் பிரேமதாசாவின் சகபாடியுமான சிறிசேன கூரேயையும் அவரது சகாக்களையும் பதவி விலகும்படி செய்துவிட்டு, அப்பதவிகளைத் தனக்கு ஆதரவானவர்களுக்கு விஜேதுங்கா வழங்கியுள்ளார்.

ஆனால் கட்சிக்குள் காமினியின் வருகையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் அவரது ஆதரவாளர்களும் விரும்பவில்லை. ஏனெனில் காமினி திசாநாயக்காவின் வருகை ரணிலின் பதவி அரசியல் அபிலாசைக்குக் குந்தகமானது என்று அவர்கள் கருதுகின்றனர்.

ஆனாலும் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாத விஜேதுங்கா, காமினியை கட்சிக்குள் எடுத்து, அமைச்சர் பதவி கொடுக்க முயல்கின்றார்.

இவ்விதம் தனிநபர் முரண்பாடுகள் மற்றும் வர்க்க அபிலாசைகள் என்பவற்றால் ஐ. தே. கட்சிக்குள் உள் முரண்பாடு பலமடைந்துள்ளது.

இவ்வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தோன்றியுள்ள இந்த உட்கட்சிப் பிரச்சினைக்கு மத்தியில் தேர்தலை அது வெல்லுமா என்பதில், அரசியல் அவதானிகள் சந்தேகம் எழுப்புகின்றனர். அதேவேளை ஐ. தே. கட்சியைவிட எதிர்க்கட்சிக் கூட்டணியை பதவியில் இருத்திப்பார்க்க சிங்கள மக்கள் விரும்புகின்றனர் என்றும், கொழும்பில் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தாம் பதவிக்கு வந்தால் நாட்டின் உயிர்நாடியையே ஆட்டிப் படைக்கும் இனப்போருக்குத் தீர்வு காண முயற்சிப்போம் என்று எதிரணித் தலைமை கூறியுள்ளது.

எதிரணித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சிறிமாவோ அம்மையாரின் இரத்தம் தோய்ந்த கடந்தகால வரலாற்றைத் தமிழினம் மறக்கக் கூடாது. ஒரு சிறு கிளர்ச்சியை நடாத்திய சிங்கள இனததின் 10, 000 இளைஞர் - யுவதிகள் அவரது ஆட்சியில் கோரமாகக் கொல்லப்பட்டதை, எவரும் மறக்க மாட்டார்கள். இந்நிலையில் புரையோடிப்போய்விட்ட தமிழரின் இனப்பிரச்சினையை அவர் ஜனநாயக வழிமுறைமூலமே அணுகுவார் என்று, எப்படி உறுதியாகக் கூறமுடியும்? அதேவேளை, தமிழினத்தை அடக்கவேண்டும் என்று பச்சையாகவே வெறிகக்கும் 'ஹெல உறுமய' போன்ற பேரினவாத அமைப்புகளுடன் எதிரணி அரசியல்வாதிகள் வைத்திருக்கும் உறவுகள், தட்டிக்கழிக்கக்கூடியவை அல்ல. எதிரணி பதவிக்கு வந்தால் இப்பேரினவாத சக்திகளின் செல்வாக்குக்கு கட்சித் தலைமை உட்படக்கூடிய சாத்தியங்களையும் நிராகரிக்கமுடியாது.

இது ஒருபுறமிருக்க, திருமதி சந்திரிகாவை 'தேசத்தை மீட்க வரும் ஒரு இரட்சகராக' பார்க்கும் பார்வையும் பலமட்டங்களில் நிலவுகின்றது.

தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாகவும், அதன் உச்சவடிவமான விடுதலைப் போர் தொடர்பாகவும், சந்திரிகா குழப்பமான கருத்துக்களுடனேயே இருக்கின்றார் என்பதை, அவரது பத்திரிகைச் செவ்விகள் புலப்படுத்துகின்றன.

'இனப்பிரச்சினை உண்டு' என்று ஏற்றுக்கொள்ளும் அவர், அதன் தவிர்க்கமுடியாத விளைவாகிய விடுதலைப் போரைப் பயங்கரவாதம் என வர்ணித்துள்ளார். இதை அவரின் ஆழ் மனதில பதிந்துள்ள பேரினவாதச் சிந்தனைக்கு, ஒரு உதாரணமாகவே சொல்லலாம். அத்துடன் 'இனப்பிரச்சினை உண்டு' என்று அவர் ஏற்றுக்கொண்டதை, ஒரு பெரிய சாதனையாக அல்லது நம்பிக்கைக் கீற்றாகக் கருதமுடியாது. அந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அவர் எதை முன்வைக்கப்போகின்றார் என்பதே முக்கியம். தீர்வை முன்வைக்கும்போதுதான் பேரினவாத பூதம் விழித்துக்கொள்ளும் என்பது கடந்தகால வரலாறு.

தமிழரின் நிலம் சிங்களக் குடியேற்றங்கள்மூலம் கபளீகரம் செய்யப்படுவதும், தமிழரின் தாயக நிலத்தை அங்கீகரிக்க மறுப்பதும் சிங்கள நாட்டுப்பற்று ஆயிற்றே! அப்படியாயின் இந்தப் பேரினவாத மலைகளை சந்திரிகா உடைப்பார் என்று எதைவைத்து நம்புவது?

ஆகவே, 'இனப்பிரச்சினைக்கான தீர்வு' என்ற கருத்தை, எதிரணித் தலைமையின் வெறும் ஒரு தேர்தற் கோஷமாகவே பார்க்கவேண்டியுள்ளது! ○

# புலிகளுக்கு எதிரான தடை

**- தமிழக வார இதழ் 'ராணி' யின் (8-5-94) கருத்து**

விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசு விதித்த தடை இந்த மாதத்துடன் முடிவடைகிறது.

இந்தத் தடையை நீடிப்பதா, வேண்டாமா என்று டெல்லி சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறது!

''இரண்டு ஆண்டு தடையை நீடிக்க வேண்டும்'' என்று தமிழ்நாடு அரசு வற்புறுத்தி வருகிறது.

'' தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளே இல்லை! ஒழித்துவிட்டோம்!'' என்று நாளதோறும் அறிக்கை வெளியிட்டுக்கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசு, இல்லாத புலிகளுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்று ஏன் கூறுகிறது?

இப்பொழுது டெல்லியுடன் தமிழ்நாடு ''டு'' போட்டிருக்கிறது! அந்த ஒரே காரணத்தால்தான், தடையை நீடிக்க டெல்லி விரும்பாத பொழுது, ''நீடிக்க வேண்டும்'' என்று தமிழ்நாடு அரசு கூறுகிறது! ஆகாத மருமகள் கால் பட்டாலும் குற்றம், கைபட்டாலும் குற்றந்தானே!

அது அவர்கள் பாடு, இருக்கட்டும். தடையை நீடிக்க வேண்டுமா என்று நாம் நடுநிலையுடன் ஆராய்ந்து பார்ப்போம்!

## விடுதலை இயக்கம்

விடுதலைப் புலிகள் சுதந்திர ஈழம் பெறப் போராடுகிறார்கள். அது ஒரு விடுதலை இயக்கம். இலங்கை அரசே விடுதலைப் புலிகளைத் தடைசெய்யாதபொழுது, நாம் ஏன் தடைசெய்ய வேண்டும்?

நாமும் விடுதலைக்காகப் போராடியவர்கள்தானே! நம்முடைய நேதாஜியும் ஆயுதம் ஏந்தி, விடுதலைப்போரை நடத்தியவர்தானே?

விடுதலைப் புலிகள் 'கெரில்லா' க்கள் என்ற நிலையிலிருந்து உயர்ந்து, ஒரு வலிமைமிக்க, கட்டுப்பாடு மிகுந்த, உயிருக்கும் துணிந்த ஒரு விடுதலைப் 'போர்ப் படையாக மாறிவிட்டார்கள் என்பதை, நாம் மறந்துவிடக்கூடாது!

## ராஜீவ் காந்தி கொலை

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, புலிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டது.

ராஜீவ் காந்தியைக் கொன்றது புலிகள்தானா?

அந்த நேரத்தில் தேர்தல் ஆதாயத்துக்காக அப்படிப் பிரசாரம் செய்யப்பட்டது! ஆனால், உண்மை என்ன?

ரஷியாதான் ராஜீவ் காந்தியைக் கொன்றது......

அமெரிக்காதான் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தது......

இந்திய உளவுப் படையே ராஜீவ் காந்தியைக் கொன்றது .....

என்று எல்லாம் கூறப்படவில்லையா?

ராஜீவ் காந்தி ஏன் கொலை செய்யப்பட்டார் என்பது பற்றி விசாரிக்கும் நீதிபதி ஜெயின், போன வாரம் கூறியிருக்கிறார் -

'' நான் கேட்கும் கோப்புகளை சர்க்கார் கொடுப்பது இல்லை. 'அவை இரகசிய கோப்புகள்' என்று கூறிவிடுகிறார்கள்'' என்று.

இதற்கு என்ன காரணம்?

புலிகள் கொலை செய்திருந்தால், சர்க்கார் கோப்புகளை நீதிபதி முன் தூக்கிப் போட்டு இருக்குமே!

ராஜீவ் கொலையில் வல்லரசுகளுக்குத் தொடர்பு இருக்கிறது! அது பகிரங்கமாக வெளிப்பட்டால், அரசியல் நெருக்கடி ஏற்படும்! அதனால்தான் டெல்லி மூடி மறைக்கிறது என்று ஊகிக்கத் தோன்றுகிறது அல்லவா?

## அது அரசியல்

ராஜீவ் காந்தி கொலை ஒரு அரசியல் கொலை!

இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டார். அதற்காக இந்தியாவில் சீக்கியர்களே வாழக்கூடாது என்று தடைசெய்துவிட்டோமா?

காந்தியடிகளைக் கொன்றது யார்? எந்த இயக்கம்? அந்த இயக்கத்தைத் தடைசெய்துவிட்டோமா? இல்லையே! இன்று எத்தனையோ பெயரில் கிளைகள் விட்டு அந்த இயக்கம் உலாவுகிறதே!

அரசியல் கொலைகளை அரசியலாக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, கொலைகளாக எடுத்துக்கொள்ளக் கூடாது!

அரசியலிலோ நிரந்தர நண்பனும் கிடையாது!; நிரந்தரப் பகைவனும் கிடையாது!!

## இந்திரா காந்தி செய்தது!

விடுதலைப் புலிகளை வளர்த்தவர் இந்திரா காந்தி. அவர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்தவர் இந்திரா காந்தி. அவர்களுக்கு ஆயுதங்கள் கொடுத்தவர் இந்திரா காந்தி. ஏன் இவ்வளவும் செய்தார்? அதுதான் அரசியல் தந்திரம்!

இலங்கையில் இந்தியத் தூதராக இருந்தவரும், புலிகளுடன் நெருங்கிப் பழகியவரும், இந்திய அரசின் வெளிநாட்டுச் செயலராக இருந்தவருமான தீட்சித், புலிகளுடன் இந்திய அரசு மீண்டும் உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார் என்றால், அதன் பின்னே எவ்வளவு அரசியல் தந்திரம் இருக்கவேண்டும்!

புலிகள் போராடுவது தமிழர்களின் விடுதலைக்காக. தமிழர்கள் யார்? நம் உடன்பிறப்புகள்! நாம் தமிழர் அல்லவா? அவர்கள் துப்பாக்கிக் குண்டுகளால் - பீரங்கிக் குண்டுகளால் - விமானத் தாக்குதலால் காயம்பட்டு, குருதி கொட்டக் கொட்ட நம்மைத்தேடி வரும்பொழுது, அவர்களின் காயங்களுக்கு நாம் கட்டுப் போடவாவது வேண்டாமா? இதற்காவது தடையை நீக்க வேண்டாமா? தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் அல்லவா! ○

## லெப். கேணல் சூட்

# நிமிர்ந்த பனை

சிலந்திவலைப்பின்னலாகிப் படர்ந்திருந்த இந்தியர்களின் கையில், தமிழீழம் சிக்கிப்போயிருந்தது ஒரு காலம்.

மறக்கமுடியாத அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் நின்றுபிடித்து புலிகளின் சுவடுகளைப் பேணிக்காத்து நிலைநிறுத்தி வைத்திருந்த வீரர்கள், குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில பேர்தான். அந்தச் சில பேருக்குள் நேற்றுவரையும் எஞ்சியிருந்தவன்தான் சூட்.

அவனை விளங்கிக்கொள்ள அந்த நேரத்து 'இராணுவச் சூழ்நிலை'யைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்தச் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள வலிகாமத்தின் தரையமைப்பைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தமிழீழத்தில் வேறெங்கும் இல்லாதவிதமாக முற்றுமுழுதான நகரச் சூழலை பெரிய அளவில்கொண்ட புவியியல் அமைப்பையும், குறைந்தளவு நிலத்தில் கூடியளவு மக்கள் அடர்த்தியாக வாழும் குடியியல் நிலையையும் கொண்ட பிரதேசம் அது.

பகைவனுக்கு முழுமையாக ஒத்துழைத்தது அந்த நில அமைப்பு. அது அவனுக்குச் சாதகமான ஒரு சூழல்.

அதே சமயத்தில் - இனங்காண முடியாமல் சனங்களோடு இரண்டறக் கலந்திருந்த துரோகிகள் வேறு. இந்தியர்கள் போட்ட எலும்புகளை நக்கிக்கொண்டிருந்து, இயலுமான அளவுக்கு அவர்களுக்குத் துணைபோன கும்பல்களும், ஆட்களும்.

இதற்குள் இன்னொரு விடயம் என்னவென்றால்- யாழ்ப்பாண மாநகரத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் வலிகாமம் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதானது இராணுவ அரசியல்ரீதிகளில் மிகமிகப் பிரதானமான ஒன்றாக இந்திய - சிறீலங்காத் தளபதிகள் அப்போதும் இப்போதும் கருதுகிற அளவுக்கு முக்கியத்துவத்தையும் பெற்றிருந்த பகுதி இது.

அந்தவகையில் - மணலாற்றுக்கு அடுத்தபடியாக இந்தியர்களின் அதிகூடிய கவனம் செலுத்தப்பட்ட மையமாகவும் வலிகாமப் பகுதி விளங்கியது.

இத்தகைய ஒரு புற நிலைமைக்குள் -

உயிர்வாழ்வே உத்தரவாதமற்ற இராணுவச் சூழ்நிலைக்குள்-

புலிகள் இயக்கத்தை நிலைநிறுத்தி வைத்திருப்பதற்கு இடையறாது போராடிய வரலாற்று நாயகர்களில் எஞ்சியிருந்தவன் சூட் மட்டும்தான்.

ராஜன், சுபாஸ், லோலோ, தும்பன், ரெட்ணா, கட்டைசிவா, கரிகாலன்...... என எல்லோரும் அவனைவிட்டுப் போய்விட - அவர்களின் நினைவுகளைச் சுமந்துகொண்டு போராடியவன் இன்று எங்களை விட்டுப் போய்விட்டான்.

இப்போது...... அவனது நினைவுகளைச் சுமந்துகொண்டு நாங்கள்......

அந்த இருண்ட இரண்டரை வருடங்கள்.

அது மிக நெருக்கடியான ஒரு காலகட்டம்.

வர்ணித்துச் சொல்லமுடியாத ஒரு பயங்கரச் சூழ்நிலை அப்போது நிலவியது.

பாசமிகு மக்கள் பாதுகாத்து இடமளிக்கத், தூங்கப்போகும் இரவுகள் தூக்கமற்றுப் போகும். ஓரோசையுமற்று அசையும் இரவில், தூரத்து நாயோசை இந்தியன் நகரும் சேதியைச் சொல்லும். திடீரென ஒரு பதற்றம் பற்றிக்கொள்ளும். அந்தச் சூழ்நிலையில் அது இயல்பானது. நாய் குரைப்புச் சத்தம் அகோரமாய் நெருங்கும். அது ஒரு அச்சமூட்டும் குறியீடு. விரிந்து நகர்ந்து வட்டமிட்டுச் சுருங்கி எதிரி முற்றுகையிடுகிறபோது, நாயோசை உச்சக்கட்டத்தில் இரையும். நெஞ்சு விறைத்துப்போகும். நள்ளிரவின் அமைதி சிதைய ஊர் துடித்து விழிக்கும். தங்களுக்காக வேண்டிக்கொள்ளும் மனங்கள் 'பிள்ளைகளைக்' காக்கச் சொல்லியும் இறைவனிடம் மன்றாடும். துப்பாக்கிகள் தயாராகும். தேர்வு நெம்பு, தானியங்கிக்கு மாற, சுட்டுவிரல் சுடுவில்லை வளைத்துக்கொள்ளும். இருளை ஊடறுத்து விழிகள் முன்னேறும். எதிரி எதிர்ப்படும் கணத்தில் சன்னங்கள் பாய முற்றுகை உடைபடும். தப்பித்து மீண்டு, சொல்லப்பட்ட இடமொன்றில் சந்திக்கின்றபோது தோழர்களில் ஒருவனோ இருவரோ வந்திருக்கமாட்டார்கள்......

ஆள்விட்டுப் பார்த்து ஆமி இல்லை என்றபின் மெல்ல நடந்து வீதி கடக்கும்போது, சடுதியாய் எதிர்ப்படும் சிற்றூர்திக்குள்ளிருந்து துப்பாக்கிகள் உறுமும். ஆளையோ, அல்லது ஆடைகளையோகூட சன்னங்கள் துளையிடும். உரப்பைக்குள் இருக்கும் எங்கள் துப்பாக்கியின் சூடு தணியும்போது, நாலாவது வேலி கடந்து நாங்கள் ஓடிக்கொண்டிருப்போம். எம்மை முந்திக்கொண்டு எதிரியின் சன்னங்கள் சீறும்.

'முற்றுகையிடுகிறான் பகைவன்' என நினைத்து அடித்து உடைத்துக்கொண்டோ, அல்லது வலு அவதானமாக நகர்ந்தோ அவனைக் கடந்து மறுபக்கம் போய் 'தப்பி வெளியேறி விட்டோம்' என மகிழும்வேளை, இப்போதுதான் முற்றுகைக்குள்ளே வந்து சிக்கிப்போயுள்ளோம் என்பது தெரியவரும். நடந்த தவறு விளங்கும்போது தலை விறைக்கும்.

'பிரச்சினை இல்லாதவை' எனக் கருதி இரவில் படுக்கப்போகும் இடங்கள். அதிகாலையில் எதேச்சையாகச் சுற்றிவளைக்கப்படுகின்ற துரதிர்ஷ்டம் நிகழும். சந்தர்ப்பவசமாகச் சிக்கிக்கொண்டுவிடுகிற அந்த விபரிக்க முடியாத சூழ்நிலைகளில் 'வாழ்க்கை வெறுக்கும்'.

''எல் ரீ ரீ'' எனக் கத்திக்கொண்டு இந்தியன் எட்டிப் பிடிக்கும்போது, 'கதை முடிந்தது' என்று குப்பியைத் தொடும் வேளையிலும், இறுதி நேர முயற்சியாக உதறிப் பறித்துக்கொண்டு தப்பி ஓடுகிறபோது நெஞ்சுக்குள் தண்ணிவரும்.

இப்படியாக ஏராளமான மயிரிழைகள்.

சன்னம் துளைத்தவர்களையும், 'சயனைட்' அடித்தவர்களையும் தவறவிட்டு தப்பித்து வந்தபோதெல்லாம், அந்த ஆருயிர் நண்பன் ஓரமாய் இருந்து கண்ணீர் சொரிவான்.

ஆனால், ஒருபோதும் அந்தப் புலிவீரனின் உள்ளம் தளர்ந்துபோனதில்லை.

நெருக்கடிகள் கூடிக்கூடி அழுத்திய போதெல்லாம் இறுகிக்கொண்டே போனது அவனுடைய மனவுறுதி.

கற்பாறையைப் பிளந்து முளையிடும் துளிராகி - இந்தியர்களின் கூடாரங்களுக்கு நடுவில் அவன் நிமிர்ந்தான்.

எதிரி வளைத்து நின்ற மண்ணில், கைவிடாத துப்பாக்கியோடு கடைசி வரைக்கும் வலம்வந்து போராட்டத்தை உயிர்த்துடிப்போடு உயர்த்திச் சென்ற வேங்கை அவன்.

மரணம் அவனது உயிரை உரசிச் சென்ற போதெல்லாம் தப்பித்து மீண்டுவந்து, 'என்ன நடந்ததோ......?' என ஏங்கி நின்ற எங்களின் முன் கண்குளிரக் காட்சியளித்து, ஆச்சரியப்படுத்திய வீரன்.

கட்டைக் காற்சட்டையும் சேட்டுமாக அந்தச் 'சின்னப் பொடியன்' தோற்றத்தில், இந்தியர்கள் பலதரம் ஏமாந்திருக்கிறார்கள்.

மூலைமுடுக்கெல்லாம் நுழைந்து இந்தியர்கள் ஒத்தியெடுத்த வேளைகளிலெல்லாம், அவன் நேசித்த மக்களால் பொத்திவைத்துப் பாதுகாக்கப்பட்ட குழந்தை.

எப்படி அவனால் நின்றுபிடிக்க முடிந்தது...?

அது அதிசயம்தான்!

ஆனால், அவனைப் பாதுகாத்தது வெறும் அதிர்ஷ்டம் மட்டுமல்ல.

விவேகம், புத்திக்கூர்மை, மக்கள் செல்வாக்கு அவனுடைய சின்ன உருவம் இவற்றுக்கு மேலாக அவனுடைய உறுதியும், துணிச்சலும்.

இவைதான் அவனை உயிர்வாழச் செய்வித்தன.

அடுத்த காலை நிச்சயமற்றிருந்த அந்த நாட்களில் அவனோடுதான் நம்பிக்கையோடு தூங்கப் போகலாம். சாவு எங்களைத் தட்டி எழுப்பிய எத்தனையோ தடவைகளில் தப்பி வந்தது அவனால்தான் எனலாம்.

அப்போது யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த பொட்டம்மானும் தோழர்களும் அவனது 'ஒழுங்கமைப்பு'களால் பல சந்தர்ப்பங்களில் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள்.

'மக்கள் நேசம்' அவனது உயரிய குணாம்சங்களில் ஒன்று. அவன் அவர்களில் வைத்த அன்பு அவர்களை அவனில் பாசம் வைக்கவைத்தது.

அந்த நெருக்கம் அலாதியானது; அதுதான் அவனுக்கு கவசமாகவும் இருந்தது.

அந்த நேசத்தின் தொடக்கம் - அவன் போராளியான ஆரம்பம். அது 1984 ஆம் ஆண்டின்இறுதிப் பகுதி. தனது பதினேழாவது வயதில் இயக்கத்தில் சேர்ந்தவன், அப்போது முதல் அந்த மக்களோடேயே வாழ்ந்தான். அந்த மக்களுக்குக் காவலாய் இருந்தான்.


அவன் மக்களை அணுகிய விதமே வித்தியாசமானது அதனால்தான் அவர்கள் அவனை நெஞ்சிலிருத்தி வைத்திருந்தார்கள்.

'மற்ற இயக்கங்களின் ஊர்கள்' என்று ஒதுக்கிய கிராமங்களில்தான் தூக்கமும், வேலையும். 'மற்ற இயக்கங்களின் ஆட்கள்' எனப்பட்டவர்கள் வீடுகளில்தான் குளிப்பும், சாப்பாடும். எல்லா ஊரையும் எம்முடையதாக்கி, எல்லாப் பேரையும் எம்மவர்களாக்கினான்.

31. 05. 1967 அன்று தனலட்சுமி அம்மாவுக்கும், நவரத்தினம் ஐயாவுக்கும் பிறந்தவனுக்கு விக்னராஜன் என்று பெயரிட்டார்கள்.

தனது 16 ஆவது வயதிலேயே 'புலிப்படைப் பொடியளுக்குப் பின்னால்' திரியத் துவங்கிவிட்டான்.

பாயில் தலையணை அடுக்கி ஆள்மாதிரிப் போர்த்திவிட்டு இரவில் காணாமல் போனவன்... ஸ்ரான்லி கொலிச்சில் தம்பியையும், தங்கையையும் இறக்கிவிட்டு, உள்ளே வராமல் மிதிவண்டியைத் திருப்பிக்கொண்டு மற்றப்பக்கமாகப் போனவன்... போய்ப்போய் வந்தவன்......



ஒரு நாள் ஒரேயடியாகப் போய்விட்டான்.

சூட் ஒரு அற்புதமான போராளி.

தனது அழகான ஆளுமையால் தோழர்களைத் தன்னோடு இறுகப் பிணைத்திருந்தவன்.

கண்டிப்போடும், பரிவோடும் அரவணைத்து வருடிய இனிய காற்று. அவர்களில் அவன் பொழிந்த பாசமே தனி.

மனங்குழம்பிப்போகின்ற எந்தப் போராளியையும் ஆதரவோடு கதைத்துத் தெளிவூட்டுகிறபோது, அவனொரு பேராசான்.

முழுமையாக என்று சொல்லாவிட்டாலும் - இயக்கத்தின் நீண்ட வரலாற்று ஓட்டத்தோடு பெருமளவு கலந்து, அமைதியாக, ஆரவாரமில்லாமல் - தனது செயலால் வளர்ந்து - மெல்ல மெல்ல உயர்ந்தவன்.

சூட் ஒரு சண்டைக்காரன் அல்ல, அதற்காக சண்டை தெரியாதவன் என்றும் சொல்லிவிட முடியாது. அதாவது அவன் தேர்ச்சிபெற்ற யுத்த வீரன் அல்ல.

அப்படியானால் அவன் முன்னுக்கு வந்தது ....?

அது சண்டைகளால் அல்ல;

சண்டைக்கு வெளியில் நின்று அவன் போராட்டத்திற்கு ஆற்றிய அளப்பரிய பணிகளால்.

தான் பணியாற்றிய துறைகளிலெல்லாம் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளில் பேர் சொல்லும் முத்திரைகளைப் பதித்து வளர்ந்த போராளி.

சண்டைக்கு வெளியில் நின்ற எல்லாப் போராளிகளையும் போல அவனும் போர்க்களத்துக்குப் போகத்தான் துடித்தான். ஆனால், அவனது தேவை அவனை அதிலிருந்து தள்ளியே வைத்திருந்தது.

ஒரு விடுதலை வீரனின் போராட்டப் பணியானது இராணுவ அளவுகோலால் மட்டும் அளவிடப்பட முடியாதது.

சண்டையிடுவதுதான் ஒரு விடுதலைப் போராட்டத்தில் பிரதான அம்சம். ஆனால், அது மட்டுமே போராட்டம் ஆகாது.

சண்டை என்பது, போராட்டம் நகர்த்திச் செல்லப்படும் பல்வேறு பரிமாணங்களில் ஒன்று.

சண்டைகளில் நிற்காதபோதும் - உண்மையான அர்ப்பண உணர்வோடு வாழ்ந்து - போராட்டத்தின் ஏனைய பரிமாணங்களூடு அபார திறமையாகக் காரியங்களைச் சாதித்த எத்தனையோ போராளிகளுள் அவனும் ஒருவன்.

இந்தியப்படை வெளியேற்றப்பட்டுவிட்டது.

இப்போது அவன் புலனாய்வுத்துறையில்.

பொட்டம்மானின் உற்ற துணைவர்களாக நின்று, இயக்கத்தையும் - போராட்டத்தையும் - தேசத்தையும்பாதுகாத்த முதன்மையான போராளிகளுள் ஒருவனாக, சூட் அல்லும் பகலும் ஓய்வற்றுச் சுழன்றான்.

துவக்கத்தில் யாழ். மாவட்ட புலனாய்வுத் துறைப் பொறுப்பாளனாகப் பணி.

அவன் பொறுப்பை ஏற்றபோது அங்கு இருந்த சூழ்நிலை வித்தியாசமானது. அதனால்



மிக்க அவதானமாகவும், மிக்க நிதானமாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவன் எச்சரிக்கையோடு அடிகளை வைத்தான்.

நேற்றுவரை எதிரியினால் முற்றுகையிடப்பட்டிருந்த அந்தப் பிராந்தியம். இன்று திடீரென - ஒரேநாளில் எங்கள் கைகளுக்கு வந்துவிட்ட காலகட்டம் அது. இந்தியாவின் எச்சசொச்சங்கள் எங்கும் பரவியிருந்த நேரம். 'மக்களே போல்வர் கயவர்' என்று அன்றொரு நாள் வள்ளுவன் சொல்லியிருந்ததைப் போன்ற நிலைமை.

எவரிலுமே சந்தேகம் எழக்கூடிய சூழல்.

மிகக் கவனமாக இனங்கண்டு பிரித்தறிய வேண்டும். எங்கள் புலனாய்வு நடவடிக்கைகளில் தவறு நேர்ந்து, அது மக்களைப் பாதித்துவிடாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

புலனாய்வுத் தவறுகளினால் மக்கள் எவ்விதத்திலும் துன்பப்பட்டுவிடக்கூடாது, அத்தகைய அவதானத்துடன் செயற்படும்போது நடவடிக்கைகளில் நாங்கள் காட்டும் நிதானமானது, துரோகிகளுக்கு வாய்ப்பளித்து அவர்கள் சுலபமாகச் செயற்பட இடமளிக்கவும்கூடாது.

இப்படிப்பட்ட சிக்கலான ஒரு சூழ்நிலையில் பொறுப்பெடுத்து, மிக நேர்த்தியாகவும் சிறப்பாகவும் தனக்குரிய பணியை சூட் செய்து முடித்தான்.

நாட்கள் உருண்டன.

புலனாய்வுத்துறையின் முக்கியமான ஒரு போராளியாக -

அதன் தாக்குதற் படைப்பிரிவுக்குத் தளபதியாக -

இயக்கத்தின் 'கரும்புலிகள்' அணி ஒன்றுக்குப் பொறுப்பாளனாக -

சூட் படிப்படியாக உச்சத்துக்கு வந்தான்.

இயக்கத் தலைமையினது அதீத நம்பிக்கைக்கு அவன் பாத்திரமானான்.

முக்கியத்துவம் மிக்க ஒரு கரும்புலித் தாக்குதல்.

இலக்குப் 'பெரியது'

எனவே, ஒழுங்கமைப்பும் பெரிதாக இருந்தது.

திட்டம் தீட்டப்பட்டபோது பொட்டம்மான் சூட்டைத்தான் தெரிந்தெடுத்தார்.

தியாகமும், துணிச்சலும், இலட்சிய வேட்கையும் போக - மதிநுட்பமும், விவேகமும், செயற்திறனும் அதிகமாகத் தேவை. இவையெல்லாம் ஒருங்கிணைந்தவன் சூட்.

ஆனால் தலைவரோ ஆளை மாற்றச் சொன்னார்.

இந்தப் பணியைவிடவும் அதிகமாகப் போராட்டத்துக்கு அவன் பயன்படுவான் என்று அவருக்குத் தெரிந்தது; உண்மைதான்.

ஆனாலும், தாக்குதலின் முக்கியத்துவத்தையும், அதன் பிசகாத - துல்லியமான - வெற்றியையும் கருத்திற்கொண்டு, பொட்டம்மான் சூட்டைத்தான் வலியுறுத்தினார்.

இருந்தபோதும் - தலைவரது கருத்திற்கிணங்க கடைசியில் முடிவு மாற்றப்பட்டது.

அதன்பின்னர்-

எங்களது இன்னுமொரு கரும்புலி வீரன், அந்த 'இலக்கை' மிக வெற்றிகரமாகத் தாக்கி அழித்து வரலாற்றைப் படைத்தான்.

பூநகரிச் சமருக்குப் புறப்படும்போது சூட் தேர்ச்சிபெற்ற ஒரு சண்டைத் தளபதியாக விளங்கினான்.

ஆனால், அவன் இராணுவ ரீதியில் மேலோங்கியதானது நீண்டகால அனுபவத்தில் படிப்படியாக வளர்ச்சிகண்டு அல்ல.

நன்றாக இனங்காணப்பட்டு, திடீரென அவனுக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டது.

குறுகியகால இராணுவப் பணியையே அவன் ஆற்றினான்.

ஆனால், அந்தச் சொற்ப காலத்துக்குள்ளேயே, பெருந் தளபதிகளினது மதிப்பையும், பாராட்டையும் அவன் பெற்றுவிட்டிருந்தான். அது ஒரு இலேசான காரியமல்ல.

அவனது குறுகியகால இராணுவ வளர்ச்சி அசாத்தியமான ஒரு சாதனை.

பூநகரிப் பெரும் போர்க்களம்.

பல்வேறு படையணிகள், பல்வேறு சண்டை முனைகள், பல்வேறு வழிமுறைகள்.

பரந்த ஒரு பிரதேசத்தில் எழுந்து நின்ற எதிரியின் பெரும் படைத்தளம் ஒன்றின்மீது - அதன் எல்லா அரண்களிலும் சமநேரத்தில் தாக்கி - புலிகள் நிகழ்த்திய மிகப்பெரிய படையெடுப்பு.

ஒரு முனையில் சூட்டின் படையணி.

எதிரியின் அரண் தொகுதி ஒன்று சூட்டினது படையணிக்குரிய இலக்கு. அதன் அருகிலிருந்த இன்னொரு அரண்தொகுதி லெப். கேணல் குணாவின் படையணிக்குரிய இலக்கு.

இரண்டு அணிகளும் தமது இலக்குகளை வீழ்த்திய பின் ஒன்றிணைந்து பிரதான தாக்குதலணி ஒன்றுக்குத் தோள் கொடுக்கவேண்டுமென்பது திட்டம்.

ஆனால் விசயம் பிழைத்துவிட்டது. பூநகரி வெற்றியின் முதல் வித்தாக, சண்டையின் ஆரம்ப நிமிடங்களிலேயே குணா வீழ்ந்து போக - அந்தப் பகுதியில் சண்டை திசை மாறிவிட்டது.

தமது இலக்கைக் கைப்பற்றிய சூட்டினது அணி முன்னேறியபோது. குணாவினது பகுதி பிசகிவிட்டிருந்தது. எதிர்பார்த்தமாதிரி நடக்கவில்லை; எதிரி அங்கு தாக்குப்பிடித்துக்கொண்டிருந்தான்.

துணை சேரவேண்டிய அணிக்குத் துணை கொடுக்கவேண்டிய நிலை.

மூர்க்கத்தனமான தாக்குதல் குணாவுக்குரிய பகுதிமீது ஆரம்பித்தது.

இறுக்கமான சண்டை,

ஆர் பி ஜி. குண்டின் சிதறல்பட்டு அவனது எம். 16 உடைந்து போக, அருகில் நின்ற தோழனிடம் ரி. 56 ஐ வாங்கிக்கொண்டு சூட் முன்னேறினான்.

கடுமையாகத் தாக்கிக்கொண்டிருந்த எதிரியின் பலமான அரணொன்றை சூட் ஆக்ரோசமாக நெருங்கினான்...... தனி ஆளாகப் பாய்ந்தான்.

எதிரிக்கு அருகில் அவன் முன்னேறினான், ...... மிக அருகில் ...... போய்விட்டான்...... போனவன் திரும்பி வரவில்லை:

அன்பு, குணா, நவநீதன், பாமா, றூபன், கணேஸ், கோபி, அவன்...... என்று 458 தோழர்கள்...... வெற்றியைத் தந்துவிட்டு வராமலே போய்விட்டார்கள்!

தமிழீழம் இப்போது தலைநிமிர்ந்து நிற்கிறது; அந்த மைந்தர்களின் நினைவோடு; அவர்கள் பெற்றுத் தந்த வெற்றியின் பெருமிதத்தோடு.

இப்போது...... நம்பிக்கையோடு காத்திருக்கிறது......

அடுத்த வெற்றிக்காக! ○

## எனக்குக் கால்வழங்காத...

( 3 ஆம் பக்கத் தொடர்ச்சி )

கிளை நானே இயக்கிக்கொண்டிருக்கிறேன். ஏன்? எமது விடுதலைக்காகவே......!

என்னால் எப்படியடா தாங்க முடியும்?

என் கால்களாக இயங்கி எனக்குக் கால் வழங்காத குறையைத் தீர்த்தவன்.

இரத்தக் காயத்தை நான் ஏற்படுத்தியபோதும் எனக்காக அழுதவன்.

நகமும் தசையும்போல் வாழ்ந்தவன்.

இந்த நாட்டிற்காக, மக்களுக்காக உன்னையே அர்ப்பணித்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட செய்தியைக் கேட்டு, என் இதயமே வெடித்ததுபோல் ஆனதடா.

உனது வீரச்சாவு மேலும் எமக்கு உறுதியைத் தந்துள்ளது.

உனக்கு முதலே விடுதலைப் போராட்டத்திலே எமது தந்தை இணைந்து செயற்பட்டிருந்தார்.

உனது பாதச்சுவடுகளை எம்மைப் பெற்ற தாயும் பின்பற்ற முடிவுசெய்துள்ளார்.

தாயக விடுதலைக் கனவோடு சென்ற உன் பாதச் சுவடுகள்மீது என் பாதங்களை வைத்துப் பின்தொடர முடியாதபோதும், என் சைக்கிளில் பின்தொடர்வேன். உன் கனவை நனவாக்குவேன்...... இது உறுதியடா என் அருமைத் தம்பியே!

ச. சுபாங்கினி,
(சகோதரி) ○

## 'வெளிச்சம்' சஞ்சிகையின் வெள்ளி இதழுக்கு அளித்த சிறப்புச் செவ்வியின்போது தலைவர் சொன்னதிலிருந்து...



''தமிழீழத்தில் போர்க்கால இலக்கியம் வளர்ந்து வருகின்றது. எமது இளம் போராளிகள் பலர் படைப்பு இலக்கியத்தில் ஆர்வம்காட்டி வருகிறார்கள் சிலரிடம் தரம்வாய்ந்த எழுத்துக்களையும், கலைப்படைப்புகளையும் அவதானிக்க முடிகின்றது. இது நல்லதொரு அறிகுறி. காலப்போக்கில் அநுபவ முதிர்ச்சியில் எமது போராளிகளிடம் இருந்து சிறந்த கலை இலக்கியப் படைப்புகளை எதிர்பார்க்கலாம். எமது போராளிகளே வரலாற்றின் கதாநாயகராக இருந்து காலததை நகர்த்திக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களே அந்தக் காலத்தைப் பதிவு செய்யும்போது அது உண்மையானதாகவும், உன்னதமானதாகவும் அமைந்துவிடுகின்றது.

தமிழரின் சரித்திரத்திலேயே இன்றைய காலம் ஒரு முக்கியமான யுகம். இன்றைய காலத்தில் கட்டவிழும் விடுதலை வரலாற்றைக் கலை இலக்கியமாக உருவகப்படுத்தி, அடுத்த தலைமுறையினரும் அறியச் செய்வதை இன்றைய சிருஷ்டிகர்த்தாக்களின் முக்கிய கடமையாக நான் கருதுகின்றேன்.

போராட்டம் பற்றியும், போர்க்கால வாழ்வு பற்றியும் ஆழமான அநுபவத்தையும், துல்லியமான பார்வையையும் கொண்டு வளர்வதால் எமது போராளிகள் சிறந்த படைப்பாளிகளாக மாறி, ஒருகாலம் உன்னதமான கலை இலக்கியங்களைப் படைப்பார்கள் என்பது, எனது நம்பிக்கை. அதனால்தான் எமது இயக்கத்தில் முளைத்து வரும் இளம் எழுத்தாளர்களையும், கலையார்வம் கொண்டவர்களையும் நான் ஊக்குவித்து வருகின்றேன்.''

# கறுப்புச் சிங்கமே! கைகளை நீட்டு குலுக்கிக் கொள்ளுவோம்

இருண்ட கண்டத்தில் விரிந்த மலரே!
வாழ்த்துக்கள்.
இரும்புத்திரையை உடைத்தெழுந்த கதிரே!
மேகங்களிடம் ''முத்தங்களும்''
காற்றிடம் ''மலர்ச்செண்டும்'' அனுப்பியுள்ளோம்.
பெற்றுக்கொள்.
''இதரைவாழைக்கன்றுகள்'' இரண்டை
இனிவரும் கடலலைகளிடம் கொடுத்துவிடுகின்றோம்.
கொடிமரத்துக்கருகில் பாத்திகட்டி நாட்டிவிடு.
அடிபெருகி எங்கள் அன்புக்குக் குலைதள்ளட்டும்.
நேற்றுவரை தென்னாபிரிக்கா என்றே
உன்னை அழைத்தோம்.
இன்று ''என் ஆபிரிக்கா'' என்றே
இங்கே ஒவ்வொருவரும் உச்சரித்துக்கொள்கின்றோம்.
''வாஸ்கொடகாமா'' வுக்கு மட்டும்தான்
நீ ''நம்பிக்கைமுனை''யாக இருக்கவில்லை;
போராடும் எங்களுக்கும் அப்படித்தான் புலப்படுகின்றாய்
நெல்சன் மண்டேலா!
கறுப்புச் சிங்கமே! கையை நீட்டு
குலுக்கிக் கொள்ளுவோம்.
உன்னைக் கட்டித்தழுவத் துடிக்கின்றோம்.
என்னசெய்வது நீ எட்ட இருக்கின்றாய்.
அன்று நீ ''சிம்மாசனம்'' ஏறியபோது
எமக்கேன் அழைப்பனுப்பவில்லை?
சிறீலங்காவுக்கு நீ எந்தவழி உறவு?
விஜேதுங்காவை விருந்துக்கழைத்தபோது
தமிழீழம் உன்கண்களுக்கு ஏன் தட்டுப்படவில்லை?
இது விருந்துகிட்டவில்லையென்ற விசனமல்ல .....
போராடும் பூமியொன்றை
புறமொதுக்கிவிட்டாய் என்ற ஆதங்கம் மட்டுமே.
போகட்டும்; இதனால் கோபமேதுமில்லை
இனிமேலாவது நண்பர்களை இனம் கண்டுகொள்
நன்மை உனக்குத்தான்.
ஆபிரிக்காவின் ''காப்பிரி'' மக்களே!
சூரியனை வழிமறித்து
தொடடுப் பேசும் வல்லமையின் வடிவே!
காற்றுக்கொதுங்கிய வெள்ளையன்
நேற்றுவரை உன் முதுகில்தான் இருந்தான்-
கறுப்பனென்று உன்னை அழைத்தபோது
வெள்ளை உதடுகள் வேதனைப்படவில்லை.
மலத்தைக்கூட
தன்வீட்டில் அறைகட்டிக் குடியிருத்தியவன்
உன்னை வீதியில் ஏறி உலாவவிடவில்லை.
படுக்கை அறைக்குள்ளும் நாயை அழைத்தவன்,
அடுப்படிக்குள்ளே கோழியை அனுமதித்தவன்,
கறுப்பனைத்தொடும் காற்றைக்கூட
வெறுத்து விரட்டினான்.
அழகான உன் கரியமேனியும்
உரமேறிய தசைநார்களும்
அவனுக்கு அச்சத்தைத் தரவில்லை.



அருவருப்பாகவே இருந்தது.
நீ பேசாமல் இருக்கவில்லை;
போராடினாய்.
வெற்றிக்கம்பத்தைத்தான்
உன்னால் தொட்டுவிடமுடியவில்லை.
உங்கு வேர்கொண்ட மரங்களெதுவும்
நீர்குடித்து வளரவில்லை.
கறுப்பனின் குருதிகுடித்தே தளிர்த்தன.
உலகெங்கும் தார்பூசியே வீதிகறுப்பானது
உன் நாட்டில் மட்டும் தான்
கறுப்பனின் வியர்வைபட்டு வீதி கறுப்பானது.
வெள்ளைச் சீமாட்டிகளின் விருந்துக்குப்பிறகு
வீசியெறியும் எச்சில் இலைக்காக
உன்பரம்பரை தாழ்வாரத்தில் தவமிருந்தது.
வந்தவன் ஆள நீ வயலில் மாடானாய் -
வெள்ளைக்காரன்,
மாட்டுத்தொழுவத்தில் கறுப்பியின் முலைதொடுவோன்-
கறுப்பனுக்குமட்டும் காயடிப்பான்.

நீ புயலாகிப் போராடியவன்தான்
என்ன செய்வது?
அம்பும் வில்லும்தான் உனக்கு அகப்பட்டது.
அவனிடம் துப்பாக்கியல்லவா இருந்தது.
காலங்கள் கழிந்தனவே தவிர
உன் துன்பங்கள் கழிய வழிவந்து சேரவில்லை.
நீண்டகாலத்தின் பின்
'நெல்சன்மண்டேலா' வந்து பிறந்தபோதுதான்
நெஞ்சுநிமிர்த்தினாய்.
எப்படியோ
சுற்றிய இரும்புவேலிச் சுவர்கள் இடிந்தன.
இன்று ஆபிரிக்காவுக்கு சிறகுமுளைத்துவிட்டது
புதிதாகப் பிறந்த கறுப்புத்தேசமே!
விடுதலைக்கு நீ கொடுத்த விலையிலும்
அதிகவிலை நாங்கள் கொடுக்கின்றோம்.
நாங்கள் போராடும் விதமே வித்தியாசமானது
உனக்குப் பக்கத்துநாடுகள் பால்வார்த்தன
எமக்கு அண்டை நாடொன்று நஞ்சையே தந்தது.
நின்றும், நடந்தும், குனிந்தும், நிமிர்ந்தும்
நீ வசதிக்குத் தக்கபடி வழிமாறியுள்ளாய்.
நாங்கள் பாதைமாற்றும் பரம்பரை இல்லையே

## உலைக்களம்

வியாசன்

விடுதலையைப் பேசிப்பெறும் எண்ணம் எமக்கில்லை
போராடிப் பெறுவதென்றே முடிவு.
பிரபாகரனைப் பார்க்காவிட்டாலும், கேட்டிருப்பாய்
தொட்டுத் தோழமையை வளர்த்துக் கொள்.
கண்டங்கள் கடந்து வாழ்ந்தாலும்
நாங்கள் உணர்வால் ஒன்றுபட்டவர்கள்.
நிறத்தால் வேறுபட்டாலும்
நீங்கள் விடுதலை பெறவேண்டுமென்று
அதிகம் விரும்பியது நாங்கள்தான்
ஏன் தெரியுமா?
வெள்ளைக்காரன் உன்னை மட்டுமா அடக்கினான்
இல்லை
எம்மை அடக்கவும் எதிரிக்கு துணைபோனான்
இங்கே கண்ணிவெடியில் சிதறும்
'' பவள் '' கவசவண்டியை எதிரிக்கு அனுப்பியதே
வெள்ளைத்தோல் வெறியன்தான்
இனி இது நடக்காது
நாங்கள் நம்புகின்றோம்.
போராடிப் பெற்ற சுதந்திரத்தின்
பெறுமதி புரிந்தவர்கள் நீங்கள்.
விடுதலையின் முகவரி தெரிந்தவர்களே!
எங்கள் சுதந்திரத்துக்கு முத்திரை ஒட்டுங்கள்
நம்பிக்கைமுனை நாடே!
எங்களின் நம்பிக்கையை
நாசமாக்கி விடாதே:
கறுப்புச் சிங்கமே: நெல்சன் மண்டேலா
ஒரு கேள்வி; பதில் வேண்டும்
சில இடங்களில் சேற்றிலேன் காலைப்புதைத்தாய்?
சமாதானத்துக்கான நோபல் பரிசை
வேடனும் புறாவும் எப்படிப் பங்கிடமுடியும்?
குருதிபடிந்த வெள்ளைக் கொலைக்கரமும்
சிறையில் வாடிய உன் கரிய திருக்கரமும்
குலுக்கிக்கொண்டபோது
அந்த விருதை எப்படி விளங்கிக்கொண்டாய்?
பரிசு வாங்கியபோது
உன்பரம்பரை சிந்திய குருதியை
எப்படி மறந்து கைகளை நீட்டினாய்?
என்றாலும் உன்மீது கோபம் வரவில்லை.
கறுப்புச் சிங்கமே! கைகளை நீட்டு
குலுக்கிக் கொள்ளுவோம்.

# "எமது மண்ணின் வளத்தில் நாம் தங்கி நிற்கவேண்டும்!"

## 'வேளாண் மன்னர்' விருது வழங்கல் நிகழ்வில் தலைவர்

**சிங்கள அரசின் பொருண்மியத் தடையைப் புறந்தள்ளி விட்டு எமது மக்களின் உணவுத்தேவையை ஈடுசெய்ய வயல்களில் போராடிய எமது உழவர்களை, தலைவர் அவர்கள் போற்றிக் கௌரவித்துள்ளார்.**

**அந்த வகையில் வடதமிழீழத்தில் நெற்செய்கையில் ஈடுபட்ட உழவர்களிடையே 'தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்' 'வேளாண் மன்னர்' போட்டிகளை நடாத்தியது. இதில் தெரிவுசெய்யப்பட்ட ஆறு 'வேளாண் மன்னர்'களுக்கு, எமது தேசியத் தலைவர் அவர்கள் பரிசளித்து கௌரவித்துள்ளார். 06-05-1994 அன்று நடந்த இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் தலைவர் ஆற்றிய உரையை, கீழே முழுமையாகத் தருகின்றோம்.**

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் காலத்திற்குக் காலம், நாம் பெரும் நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர்கொண்டு வருகிறோம்; பெரும் துன்ப துயரங்களுக்கும் முகம்கொடுத்து வருகிறோம். எமது மக்களின் உறுதிப்பாட்டை உடைத்துவிடவேண்டும் என்ற ஒரே நோக்கில், சிங்களப் பேரினவாதம் எமது மக்கள்மீது எண்ணற்ற கொடுமைகளை இழைத்து வருகிறது; பெரும் அநீதிகளைப் புரிந்து வருகிறது. இந்தக் கொடூரமான அடக்குமுறைகளை எல்லாம், மிகவும் துணிவுடனும், தளராத உறுதியுடனும், வியக்கத்தக்க முறையில் எமது மக்கள் எதிர்கொண்டு வந்திருக்கிறார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழீழ தேசம் மீது, ஒரு திட்டமிட்ட பொருண்மியத் தடையைச் சிங்கள அரசு திணித்து வருகிறது. தமிழீழ மக்களின் பொருண்மிய வாழ்வைச் சிதைத்து, அவர்களது நாளாந்த சீவியத்தை சீர்குலைக்கும் நோக்கில் இத்தடைகள் விதிக்கப்பட்டன. தமிழினம் தனதுகாலில் தனித்து வாழ முடியாது; சிங்கள தேசத்தில் தங்கிவாழ வேண்டும் என்ற நிலையை உருவாக்கி, தமிழரின் தன்னாட்சிப் போராட்டத்திற்குச் சாவு மணி அடிக்கும் நோக்கிலும் இந்தப் பொருண்மியப் போர் தொடுக்கப்பட்டது.

இந்தப் பொருண்மியத் தடை எமது மக்களின் வாழ்நிலையில் என்றுமில்லாத பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதுஎன்பதுஉண்மை. போர் அநர்த்தங்களுடன், பொருண்மிய அழுத்தங்களுமாக, எமது மக்கள் தாங்கொணாச் சுமைகளைத் தாங்கி நிற்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

எனினும் இந்தப் பெரும் பளுவின் விளைவாக, எமது மக்கள் மத்தியில் ஒரு புதிய விழிப்புணர்வும் ஏற்படத் தவறவில்லை. தடைகளால் விளைந்த பாதிப்பும் அதனால் எழுந்த பற்றாக்குறையும், அந்தப் பற்றாக்குறையால் பிறந்த தேவைகளுமாக, ஒட்டுமொத்தத்தில் சுயசார்புப் பொருளாதாரத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் எமது மக்களுக்கு நன்கு உணர்த்தியது. அந்நியனின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து போகாது, எமது மண்ணில், எமது மண்ணின் வளத்தில் நாம் தங்கிநிற்க வேண்டும் என்ற தேவையையும் உணர்த்தியது.

இந்த விழிப்புணர்வு எமது மக்களின் உழைப்பாற்றலை முனைப்புறச் செய்தது. உழைக்கும் மக்களின் உதிரத்தால் உரமூட்டப்பட்டு எமது தேசிய பொருளாதாரவாழ்வு, என்றுமில்லாத மறுமலர்ச்சி கண்டது. நெல் உற்பத்தி, பனைவள உற்பத்தி, கடல்வள உற்பத்தி, கைத்தொழில் உற்பத்தியாக, இன்று பல்வேறு துறைகளில் உள்ளூர் உற்பத்தி உயர்ச்சி கண்டு வருகிறது. எமது மக்களின் அயராத உழைப்பிற்கும், தளராத உறுதிக்கும் சான்றாக, இன்று எமது தேசிய பொருளாதாரம் தனது சொந்தக் கால்களில் எழுந்து நிற்க முனைகிறது. எதிரி திணித்துவிட்ட பொருண்மியத் தடைகள் எமது தேசத்தை முடக்கிவிடவில்லை. பதிலாக எமது தேசத்தின் பொருளுற்பத்தியை முடுக்கிவிட்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

எமது தன்னாட்சி உரிமைப் போராட்டம் தமிழீழத் தனியரசை நிறுவும் இலட்சியத்தைக் கொண்டது. இந்தத் தனியரசை நிர்மாணிப்பதற்கு ஒரு தன்னிறைவான பொருண்மியக் கட்டமைப்பு அவசியம். எனவே தான், அரசியல் விடுதலை என்ற எமது குறிக்கோளுடன் பொருளாதார விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கிறது. நாம் நிர்மாணிக்கப்போகும் நாடு, தங்குநிலையற்றதாக, தன் காலில் தரித்து நின்று வளர்ச்சி பெறக்கூடியதாக அமையப்பெற வேண்டும். அதற்கான அத்திவாரத்தை நாம் இப்பொழுதிருந்தே கட்டியெழுப்பவேண்டும்.

தமிழீழம் ஒரு செழிப்பான பூமி. வளங்கள் பல நிறைந்த தேசம். தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லக் கூடிய நீர்வளத்தையும், நிலவளத்தையும், மனித தொழிலாக்க வளத்தையும் கொண்டது. இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட இந்த வளங்களை நாம் இனங்கண்டு, அவற்றை உச்சப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும். மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், திறமையான திட்டமிடுதலின் அடிப்படையில், உற்பத்தியைப் பெருக்க வேண்டும். வேளாண்மையும், கைத்தொழிலுமே பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானது; தன்னிறைவான பொருளாதார வாழ்வுக்கு ஆதாரமானது. இந்த இரு துறைகளையும் கட்டி வளர்ப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். இந்த இலக்கில் எமது அமைப்பான 'தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்' ஆக்கபூர்வமான பல வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. இந்த முயற்சிகள் வெற்றி பெற எனது ஆசிகள்.

உழைக்கும் மக்களை ஊக்கப்படுத்தி அவர்களின் ஒத்துழைப்போடு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு முக்கிய அம்சமாக, வேளாண்மைத் துறையிலும் போட்டியை நிகழ்த்தி, 1993 – 1994 ஆம் ஆண்டிற்கான 'வேளாண் மன்னர்'களை தெரிவு செய்திருக்கிறது. எமது தாயக மண்ணில் பொன் விளைவித்து, அபாரமான சாதனை ஈட்டிய உழவர்களுக்கு, 'வேளாண் மன்னர்' விருதுகளை வழங்கிக் கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.



தலைவரிடமிருந்து பாராட்டுப்பெறும் ஒரு வேளாண் மன்னர்

**"எதிரி திணித்துவிட்ட பொருண்மியத் தடைகள் எமது தேசத்தை முடக்கிவிடவில்லை; பதிலாக எமது தேசத்தின் பொருளுற்பத்தியை முடுக்கிவிட்டுள்ளன."**

## "தாயக மண்ணில் பொன் விளைவித்த வேளாண் மன்னர்கள்"



**க. சற்குணராசா**
(யாழ்ப்பாணம்)



**ச. பாலேந்திரன்**
(கிளிநொச்சி)




**சி. சிவஞானம்**
(கிளிநொச்சி)



**க. முத்துக்குமாரு**
(முல்லை)



**வே. சிவபாதம்**
(முல்லை)



**யோசப்சகாயராசா பெரேரா**
(மன்னார்)

# புதிய தென்னாபிரிக்கா:
# மகிழ்ச்சியும் - சவால்களும்!



நெல்சன் மண்டேலா: வரலாற்று வெற்றி

**340** வருடங்களுக்கு முன் வெள்ளையரிடம் பறிகொடுத்த ஆட்சி உரிமையையும் சுதந்திரமான வாழ்வையும், தென்னாபிரிக்க கறுப்பு மக்கள் இப்போது மீண்டும் பெற்றுக்கொண்டு விட்டனர்.

ஆட்சிபீடத்திற்காக அண்மையில் நடந்த தேர்தலில் அமோக வெற்றியீட்டிய 'ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ்' கட்சி, நெல்சன் மண்டேலா தலைமையில் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளது.

மொத்தமுள்ள ஒன்பது மாகாணங்களில் ஏழு மாகாணங்களை ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. மிகுதியில், ஒன்றை முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதியான திரு. டி. கிளார்க்கின் தலைமையிலான வெள்ளை இனத்தவர்களின் 'தேசியக் கட்சி' கைப்பற்றியது; அடுத்ததை 'சூலு' தேசிய இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 'இன்காத்தா சுதந்திரக் கட்சி' கைப்பற்றியது (சூலு இனமும் கறுப்பின மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது).

நிறவெறியும் - இனவெறியும் கோரத்தாண்டவமாடிய தென்னாபிரிக்காவில், அக்கொடூர ஆட்சிக்குக் காரணமாகவிருந்த வெள்ளை இனத்தவரின் அரசியல் ஆதிக்கம் அகற்றப்பட்டு, அந்த மண்ணின் மைந்தர்களான கறுப்பினத்தவர்களின் கைகளுக்கு ஆட்சியதிகாரம் கைமாறியது, ஒரு வரலாற்றுச் சம்பவமாகும். இந்த யுகப் புரட்சியை, 27 ஆண்டுகள் தொடராகச் சிறையில் இருந்த நெல்சன் மண்டேலா தனது கட்சியின் உதவியுடன் சாதித்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு சிறையிலிருந்து நெல்சன் மண்டேலா விடுவிக்கப்பட்டு சில அரசியல் சீர்திருத்தங்கள் நடைபெறத் தொடங்குமுன், தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் பட்ட வேதனை எழுத்தில் வடிக்கமுடியாதவை. கறுப்பின மக்களை தங்களது அடிமைகளாகவே வெள்ளை இன அரசு நடாத்தியது. எல்லா இடங்களிலும், எல்லா விடயங்களிலும் கறுப்பின மக்கள் கீழானவர்கள் என்று ஒதுக்கப்பட்டிருந்தனர்; பகிரங்கமாக அவமானப்படுத்தி அடக்கினர். உணவகம், பூங்கா, பிரயாண வண்டிகள் என்பன வெள்ளையர்களுக்கு வேறு - கறுப்பர்களுக்கு வேறு என்று நிறரீதியாகத் தரம்பிரிக்கப்பட்டிருந்தன. எதிலும் கறுப்பர்கள் கீழானவர்கள் என்ற கருத்துடனேயே நோக்கப்பட்டனர்.

இதனால் உலக மனச்சாட்சியின் முன் தென்னாபிரிக்க கறுப்பின மக்கள், அனுதாபத்திற்கும் பரிதாபத்திற்கும் உரியவர்களாக விளங்கினர். இந்த நிலையில், நெல்சன் மண்டேலா தலைமையிலான புதிய தென்னாபிரிக்க குடியரசின் உதயம் உலகை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டது.

உலகின் பல தேசங்கள் மற்றும் விடுதலை இயக்கங்கள், கறுப்பின மக்களின் விடிவை மனசார வாழ்த்திச் செய்திகளை அனுப்பியுள்ளன. புலிகள் இயக்கமும் அப்படியான ஒரு பாராட்டுச் செய்தியை நெல்சன் மண்டேலாவுக்கு அனுப்பி வைத்துள்ளது; கூடவே அது ஒரு வேண்டுகோளையும் விடுத்திருந்தது.

சிறீலங்கா அரசு தனக்குத் தேவையான போராயுதங்களை வாங்கும் ஒரு சந்தையாக தென்னாபிரிக்காவைப் பயன்படுத்தி வந்துள்ளது. இந்த ஆயுதச் சந்தையை பங்கிடுக்கொள்வதில் ஒடுக்குமுறையாட்சியாளர்களான முன்னைய தென்னாபிரிக்க வெள்ளை அரசும் - சிங்கள அரசும் அக்கறைகாட்டியிருந்தன. ஆனால் இப்போது, ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாகப் போராடிய தலைவன் தென்னாபிரிக்க ஆட்சிபீடத்தில் வீற்றிருக்கின்றான். ஆகவே, தென்னாபிரிக்க வெள்ளை இன அரசு செய்ததைப்போல கொடூரமான ஆட்சி நடாத்தி, தமிழ் மக்களை இன அழிப்புச் செய்துவரும் சிங்கள அரசுக்கு, நெல்சன் மண்டேலாவின் புதிய அரசு ஆயுதங்களை வழங்கக்கூடாது என்பதே, புலிகளின் அவ்வேண்டுகோளாகும். 'உலகில் மோதல்கள் இடம்பெறும் பகுதிகளுக்கு தென்னாபிரிக்கா ஆயுதங்களை விற்காது' என்று புதிய தென்னாபிரிக்க தேசத்தின் உபஜனாதிபதி தெரிவித்திருப்பது நம்பிக்கையூட்டுவதாக உள்ளது.

இப்போது 75 வயதை எட்டியுள்ள நெல்சன் மண்டேலா அவர்கள், தனது இளமைப் பருவத்திலேயே கறுப்பு மக்களின் விடுதலைக்காகப் போராடத் தொடங்கிவிட்டார். 1950களில் இளைஞரணித் தலைவராக இருந்த அவர் தனது சகாக்களுடன் இணைந்து, வெள்ளை நிறவெறி அரசின் இனவாதச் சட்டங்களுக்கு எதிராக சட்டமறுப்புப் போராட்டங்களில் ஈடுபட்டார். இந்த அகிம்சைப் போராட்டங்கள் நிறவெறி அரசால் கொடூரமாக அடக்கப்பட்டபோது ஆயுதப் போரின அவசியம் பற்றி உணர்ந்தார். 1961 ஆம் ஆண்டளவில் அல்ஜீரியா நாட்டில் ஆயுதப் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட நெல்சன் மண்டேலா, 'தேசத்தின் ஈட்டி' என்ற பெயரில ஒரு கெரில்லா அமைப்பை உருவாக்கி, அதை வளர்க்க முயன்றார். ஆனால் இதை உருவாக்கிய சொற்ப காலத்திலேயே அவர் கைது செய்யப்பட்டு, ''அரசுக்கெதராகச் சதிசெய்தார்'' என்று குற்றம் சாட்டப்பட்டார் மூன்று வருடங்களாக தொடர்ந்து நடந்த விசாரணைகளின் முடிவில் தென்னாபிரிக்க நீதிமன்றம், நெல்சன் மண்டேலாவிற்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்த அதேவேளை, அவர் உருவாக்கிய 'தேசததின் ஈட்டி' என்ற அமைப்பும் தென்னாபிரிக்க அரசுப்படைகளுக்கு எதிராக முழுவேகத்தில் ஆயுதப்போரைத் தொடுக்கமுடியாது திண்டாடியது. அண்டை நாடுகளான மொசாம்பிக், நமீபியா போன்றவற்றில் தளங்களை அமைத்து போராட முயன்றபோதும், தென்னாபிரிக்கப் படைகள் அங்கெல்லாம் படையெடுத்துச் சென்று, கெரிலலாக்களை அழிப்பதில் கணிசமான வெற்றிகளைக் கண்டன. ஆனாலும் கறுப்பின மக்களின் உரிமைப்போர் தொடர்ந்தது.

தென்னாபிரிக்க சிறைகளில் தனது காலத்தை நெல்சன் மண்டேலா கழித்துக்கொண்டிருந்தபோதும், உலக சமூகத்தால் ''தென்னாபிரிக்க கறுப்பு மக்களின் சுதந்திரச் சின்னமாகவே'' அவர் நோக்கப்பட்டார். இறுதியில் உலக சமுதாயத்தின் நிர்ப்பந்தத்தின் பேரிலும் - தென்னாபிரிக்க கறுப்பின மக்களது உறுதிகாரணமாகவும், வெள்ளை இன அரசு படியிறங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது நெல்சன் மண்டேலாவை விடுதலைசெய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது. விடுதலையாகிய நெல்சன் மண்டேலா தனது மக்களின் விடுதலைக்காக அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். அதன் விளைவாக ஒரு சுதந்திர தேர்தல் ஒன்றைநடாத்த அரசு உடன்பட்டது. ஒரு சுதந்திர தேர்தல் மூலம் தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானித்துக்கொண்டு மூன்று நூற்றாண்டு அடிமை வாழ்வுக்கு முடிவுகட்டிவிட்டனர்.

இதேவேளை புதிய தென்னாபிரிக்க குடியரசின் எதிர்காலம் பற்றிய கருத்துக்களும் - அபிப்பிராயங்களும் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன.

தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் இனரீதியாகப் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்தாராக விளங்குகின்றனர். அதுமட்டுமல்லாமல் 'ஆபிரிக்க வின் சாபம்' என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவதுபோல், அந்த தேசிய இனங்கள் ஒன்றுக்கொன்று சென்மப்பகையுடன் உள்ளன. நிற ரீதியாக கறுப்பின மக்கள் அனைவரும் மூன்று நூற்றாண்டுகளாக வெள்ளை இனத்தால் அடக்கப்பட்டிருந்ததால், கறுப்புத் தேசியங்கள் மத்தியில் ஒற்றுமை உணர்வு இருந்தது. இது தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்பதே எல்லோரதும் அவா.

அத்துடன் தென்னாபிரிக்க வெள்ளை இன மக்களில் ஒரு பிரிவினர் சிறிது சலனத்துடனும் - அச்சத்துடனும் எதிர்காலத்தை நோக்குகின்றனர். கறுப்பின மக்களிடம் இருக்கும் 340 வருடகால ஆத்திரம் பழிக்குப்பழியாக மாறி வெள்ளை இனத்தைக் குதறி விடுமோ என்று, அவர்கள் அஞ்சுகின்றனர்.

அதேவேளை மூன்று நூற்றாண்டு அடிமை வாழ்வால் சிதைந்து சிதிலமாகிப்போய்விட்ட கறுப்பின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திவிடுவது, நெல்சன் மண்டேலா அரசிற்கு இமாலயப் பணியாகவே இருக்கும்.

சவால்களும் - பிரச்சினைகளும் இருந்த பொழுதிலும், கறுப்பின மக்களின் அரசியல் அதிகாரத்துடன் நெல்சன் மண்டேலாவின் புதிய தென்னாபிரிக்க அரசு தலைநிமிர்ந்து நிற்கும் என்று எதிர்பார்க்கலாம்! ○

# மண்ணுக்காக

### ஒரு திரைப்பட அறிமுகம்

இந்தப் பெயருக்குப் பின்னாலிருக்கும் அர்த்த பரிமாணம் காத்திரமானது.

மண்ணின் மக்களுக்காக -
மண்ணின் வாழ்வுக்காக -
மண்ணின் கௌரவத்திற்காக -
மண்ணின் பலத்திற்காக -
மண்ணின் அடிபணியாமைக்காக -

இந்த மண்ணின் மைந்தர்கள் செய்யக்கூடிய ஒன்றின் அதி உயர் வடிவத்தைச் சித்திரிக்கின்ற ஒரு கலைபபடைப்பு.

அதுதான் 'மண்ணுக்காக' 'வீடியோப்'படம்.

அதன் மூலக்கதை சொல்ல வருகின்ற விடயங்கள் இரண்டு -

வெளிப்படையாகத் தெரிவது ஒன்று; உள்ளார்ந்து உணர்த்துவது இன்னொன்று.

சொந்த மண் சுதந்திரம்வேண்டிப் போராடுகின்றபொழுது, அந்த மண்ணின் ஒவ்வொரு குடிமகனும், குடிமகளும் தனக்குரிய பங்கை எவ்வகையிலாவது ஆற்றவேண்டும் என்பதைச் சொல்வது ஒன்று.

அடுத்தது - போர்க்களத்தில் இறங்கிச் சண்டைபோடுவது மட்டுமல்லாமல், ஆயுதம் ஏந்தச் சந்தர்ப்பம் கிடைக்காதவர்களும்கூட தேசப்பற்றோடும், தியாக சிந்தையோடும் செயலாற்றி, ஈடு இணையற்றவிதத்தில் காரியங்களைச் சாதிக்கமுடியும் என்பதைச் சொல்லுவது.

ஒட்டுமொத்தமான தேசியப் பிரச்சினை சார்ந்த ஒரு கரு ஆயினும், ஒரு தனிமனிதனுக்கூடாக நகர்த்திச் செல்லப்படும் அந்தப் படக்கதை மூலம், யாரும் தனி மனிதர்களாகச் சென்றே படைத்துவிடக்கூடிய மாபெரும் இராணுவ சாதனைகளும் உண்டு என்பதுவும், அவை எமது போராட்டத்தை முன்னோக்கி உந்தக் கூடிய பாரிய விளைவுகளை ஏற்படுத்த வல்லவை என்பதுவும் உணரவைக்கப்படுகின்றது.

இராணுவ கப்டனாய்த் தோன்றும் படக்கதையின் இரண்டாவது முக்கிய பாத்திரம், சிங்களப் படை அதிகாரிகளுக்கே உரிய தமிழ் விரோத - இனத்துவேச - உணர்வை எல்லா வகையாகவும் வெளிப்படுத்தும் அட்டகாசமான வில்லன்.

வெயிலில்தான் தெரியும் நிழலின் அருமை என்பதுபோல, பின்காலத்துச் சோகத்தின் கனத்தைப் புரிந்து கொள்ளச் செய்கின்ற, முற்காலத்து வாழ்வின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் படத்தின் நாயகியும், மனதைக் கொள்ளை கொள்ளும் குழந்தை நட்சத்திரங்களும் -

மூலவேர்த் திருடர்கள் போல 'முழித்து முழித்து' காரியம் பார்க்கும் - சிங்களப் படையின் கையாட்களாக மாறிவிட்ட துரோகிகள் -

யாழ். நகரின் ஒதுக்குப்புறமாகச் சந்தித்துப் பகல்கொள்ளையடிக்கத் திட்டமிடும் மக்கள்நேயமற்ற வியாபாரிகள்-

உறவுகளை இழந்து உருக்குலைந்து திரிந்த பிள்ளை மலர்ச்சியாய் மாறிய போது அதிசயத்து நின்று, கடிதம்பார்த்ததும் கண்ணீர் விடும் பெற்றோர்கள் -

ஆகியோர் கதையோடிணைந்த கதாபாத்திரங்கள்.

அனுபவம் நிறைந்த திரைப்படத்துறை விற்பன்னர்கள் இல்லாத நிலையிலும், போதிய தொழில்நுட்ப வாய்ப்புகள் அற்ற நிலையிலும் இந்தப் படம் தரமான - சிறப்பான ஒரு உருவாக்கம்.

எமது இயக்கத்தின் பிரிவுகளான கலை பண்பாட்டுக் கழகத்திற்கும், நிதர்சனத்திற்கும் பெருமை. செவிக்கும், விழிக்கும், சிந்தைக்கும் நல் விருந்தளித்த மற்றெல்லோர்க்கும் பாராட்டுக்கள்.

தாயக 'மண்ணுக்காக' எல்லாம் செய்யவும் - எதுவும் செய்யவும் துணியுங்கள்.......

படக்கதை அதைத்தான் சொல்லுகின்றது! ○

# திருநாடு!

பயிர்கள் கதறி நின்றன!

வயல்கள் அழுதன, ஓலமிட்டன!

வறட்சியோ வெள்ள அழிவோ இன்றி நன்கு விளைந்த செந்நெற் பயிர்களின் ஏக்க ஒலி விண்ணைக் கரைத்தது!

ஏன்?

விளைந்து முற்றிய செந்நெற்கதிர்களில் எண்ணெய் ஊற்றுகிறார்கள்! இல்லை, விரைந்து எரியவல்ல 'பெற்றோல்' எண்ணெய்யை - இடைவெளிவிடாது - பாதகர், வயல் எங்கும் வீசுகிறார்கள்!

எரி பந்தத்தை ஒரு முரட்டுக் கை தூக்கி வயலில் தொட்டு முடிக்குமுன் -

ஐயோ!

காய்ந்த நெற்கதிர்கள் படரும் நெருப்பிலே துடிக்கின்றன. எரிந்து யாவும் கருகி வீழ்கின்றன. வானம் சிந்திய துளிகளும் இதனுள் வீழ்ந்து மடிந்தனவே அல்லாமல் தப்பியதில்லை!

கயவர்களும் தங்கள் கருமத்தை முடித்த காடையர்களும் ஊழிக்கூத்தாடியபடி அப்பால் விரைகின்றனர்.

வயலுக்குத் தங்களை உரமாக்கிய குடிமக்கள் தூரத்தே மறைந்து நின்று எழுப்பும் ஏக்க ஒலி மட்டும் மிதக்கிறது.

தேன் சொரியும் தென்தமிழீழத்தின் இன்னொரு வயற்பரப்பில் -

பயிர்செய்து அருவி வெட்டு முடிந்து இன்று நெல்லைக் களத்தில் குவிக்கும் வேளையில் -

வேட்டுகளைத் தீர்த்தபடி இராணுவ வாகனமொன்று உறுமி வருகிறது! உரிமைக் கமக்காரர் இரத்தம் சிந்தியும் ஓடிப் பதறியும் சிதறுகின்றனர்! தொடர்ந்து வந்த காடையர் கூட்டம் நெல் முழுதையும் ஏற்றிச் செல்கிறது, கும்மாளமிட்டபடி!

கொள்ளை!

அரச ஒத்தாசையுடன் கொள்ளை!

வேண்டுமாயின் கொலை!

''இதன் நடுவே எம் மக்களா?

இதுதான் ஆட்சியா?'' எனத்துடித்தது என் உள்ளம்!

''இதை உன் ஆட்சி என்கிறாயா, அடிமையே!'' என எழுந்தது ஒரு பெருங்குரல்.

''இது அரச வடிவம் அல்ல, உன் இனத்தை அழிக்க முயலும் அழிவின் வடிவம்'' என உறைக்கச் சிரித்தது அக்குரல்!

''அழிக்க வருவதை நீ அழி! இதன் முடிவே வெற்றி, விடுதலை, வாழ்வு, நாடு எல்லாம்!'' எனக் கூவியபடி அக்குரல் எழுந்து உயர்கிறது.

'தென்தமிழீழம் எம் உதிரமே' என்ற உணர்வுடன் உடல் கொதித்தது. அதன் வேங்கைகள் பல இங்கும் எங்கும் போரிட்டு நிற்பதை உணர்ந்த நெஞ்சம் ஆரத் தழுவுகிறது.

* *

எதிரியின் முகாம்களைத் தேடி முறியடிக்கும் வேங்கைகளைத் தாங்கிநிற்கும் இம்மண் -

போர் முனையின் நடுவேயும் -

தளராது நெற்கதிர்களையும் பயிர்களையும் தந்து உயர்வதால், வாழ்த்தப்படுகிறது!

அதற்கு உரியோர் போற்றப்படுகின்றனர்! தன்னைக் குறைத்து இவர்களை 'வேளாண் மன்னர்' என வாழ்த்துகிறான் எம் தலைவன்!

தென்தமிழீழ இணைவு எம் உயிரிலும் மேலாகிறது. இவற்றின் நடுவே -

விளையும் நெல்லை எரிக்கின்றானே - அவன் பகைவன்!

பல இடர் நடுவேயும் நெல் விளைச்சலை வாழ்த்தி ஆக்குகிறானே - இவனே தலைவன்!

அழிவின் நடுவேயும் தன் மக்களுக்கு விளைபொருள் தருவதே நாடு என்கிறது அப்பெருங்குரல்! அது பொய்யாமொழி!

இவ்வித இடர்நடுவேயும் 'மானம் உடைய' - 'வளம் தரு' - நாடு நம் வாழும் தமிழீழத் திருநாடே என்பதை எண்ணும்போது, எத்தனை இன்பம்!

நாக. பத்மநாதன் ○

# வாழ்வின் முழுமையைத் தரிசிப்போம்

## அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுத் தேர்வு

**- ஓர் விளக்கம்**

''இன்றைய அறிவியல் உலகம் விரைந்து, பரந்து வளர்ந்து வருகின்றது இந்த அறிவியல் அசைவியக்கத்திலே, உலகில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மனித வாழ்வும் புரட்சிகரமாக மாறிவருகின்றது.''

''இந்த அறிவுசார் நவயுகத்தில், வரையறுக்கப்பட்ட துறைசார்ந்த படிப்புகள் ஒரு பரந்த உலகப் பார்வையையும், விரிந்த வாழ்வனுபவத்தையும் கொடுக்கப்போவதில்லை. எனவே, துறைசார்ந்த பள்ளி - கல்லூரிப் படிப்புகளோடு பொது அறிவுத் திறனையும் எமது இளம் பரம்பரையினர் வளர்த்துக் கொள்வது இன்றியமையாதது'' என வலியுறுத்தும் தலைவர் அவர்கள், ''இது இன்றைய காலத்தின் தேவையும் கூட'' என்பதையும் சொல்கின்றார்.

இதனை அவர் மேலும் தெளிவுபடுத்தும்போது, ''நாம் கற்கின்ற அல்லது செயற்படுகின்ற துறை என்ற வரம்பிற்குள் மட்டும் நாம் ஒதுங்கி நின்றுவிடக் கூடாது. அதுவும் ஏட்டுக் கல்வியோடு நின்றுவிட்டால் வாழ்வின் முழுமையை நாம் தரிசித்துக்கொள்ள முடியாது; முழுமையான சமூக மனிதர்களாக வாழ முடியாது. அன்றாட வாழ்வுக்கும் தேவைகளுக்கும் பயன்படும் வகையில், நாட்டின் நடப்பியல்களையும் உலகத்தின் போக்குகளையும் புரிந்துகொள்ளும் வகையில், நாம் எமது பொது அறிவை வளர்த்துக்கொள்வது அவசியம்'' என்று விளக்கும் தலைவர் அவர்கள், ''அதுவே எம்மைச் சமூகத்திற்குப் பயனுள்ள மனிதர்களாக ஆக்கிவிடுகின்றது'' என்பதனையும் தெரிவிக்கின்றார்.

கடந்த வருடம் நடைபெற்ற, அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுத் தேர்வில் பங்கேற்ற - தேர்ச்சி பெற்ற மாணவர்களைப் பாராட்டிவிடுத்த அறிக்கையிலேயே, தலைவர் அவர்கள் முன்னுள்ள கருத்தை வெளியிட்டார்.

எமது இயக்கத்தின் மாணவர் அமைப்பு, 1992 ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் நடாத்திவரும் இத்தேர்வுக்கு, தலைவர் அவர்களின் இக் கருத்து கட்டியம் கூறுகின்றது.

இந்தத் தேர்வுகளின்போது தாயகத்தைப் பற்றியும் பூமி உருண்டையின் பிரமிப்புகள் பற்றியும், விரிந்து பரந்து கிடக்கும் அண்ட வெளியின் மர்ம ஜாலங்கள் பற்றியும், எமது இளமபரம்பரையிடம் உள்ள பல்துறை சார்ந்த அறிவினை இவ் வினாத்தாள்கள் பரிசோதிக்கும். மனிதனது அறிவு வீச்சுக்கு எட்டியதெல்லாம் - அவனது சிந்தனை எல்லைக்குள் சிக்கிக்கொண்டதெல்லாம் - அவனது ஐம்புலன்களுக்குள் அகப்பட்டதெல்லாம் - அங்கே கேள்விகளாக உருக்கொண்டு நிற்கும்.

இந்தக் கேள்விகளின் மூலம் -

புவியியல், வரலாறு, அரசியல், படையியல் விஞ்ஞானம், அறிவியல், விளையாட்டு, பொருளியல், பொறியியல, கலை, கணிதம், மொழி, விவசாயம், வணிகம், தொழில், செய்திப் பரம்பல், பண்பாடு மருத்துவம், புலனாய்வு, நாடுகள், இனங்கள், அற்புதங்கள், இலக்கியம், சமூகம், கோட்பாட்டுத் தத்துவங்கள், பிரசித்திபெற்ற மனிதர்கள், விடுதலைப் போராட்டங்கள், பாலியல் சமத்துவம், நிர்வாக முகாமைத்துவம, ராஜந்திர தூக்குமங்கள்...... என எல்லாமே எல்லாமே...... மனிதர்களால் உணர்ந்து கொள்ளக்கூடியவாறு நடந்தவை எல்லாம்; நடப்பவை எல்லாம; நடக்கக்கூடியவை எல்லாம், பதிலுரைக்குமாறும் கட்டுரைகளாக வரையுமாறும் கோரப்பட்டிருக்கும்.

இந்தப் பரீட்சையில் தோற்ற வேண்டும் என்பதற்காகத்தன்னும், முதன்மையான பெறுபேறுகளைப் பெறவேண்டும் என்பதற்காகத்தன்னும், இவைபற்றிய அறிவை மாணவர்கள் தேட முற்படும்போது - அவர்களது அறிவாற்றல் தன்னாலே விருத்தியடையும், அதுதான் தேவையானது.

பாடசாலை மாணவர்களே தோற்றக்கூடிய இப் பொது அறிவுத் தேர்வானது, வயதுரீதியாக வரையறுக்கப்பட்டு - ஆண்டுகள் 6, 7, 8 முதல்நிலை எனவும், ஆண்டுகள் 9, 10, 11, இடைநிலை எனவும், ஆண்டுகள் 12, 13 உயர்நிலை எனவும் மூன்று பிரிவுகளான வினாத்தாள்கள் ஊடாக நடாத்தப்படுகின்றன. பின்னர் - 6 முதல் 10 வரையான மாணவர்களது விடைத்தாள்கள் ஆண்டுரீதியாகவும், ஆண்டுகள் 11, 12, 13 இனது மாணவர்களது விடைத்தாள்கள் ஒரே பிரிவாகக் கொள்ளப்பட்டுமே மதிப்பாய்வு செய்யப்படும்.

இவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டு, தகுதியான புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். தேசிய மட்டத்தில் ஆண்டு ரீதயாக முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும்; கல்விக் கோட்ட மட்டத்தில் முதலிரண்டு இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு - பெறுமதிமிக்க - சிறப்புப் பரிசில்களும் அளிக்கப்படுவதுடன், தேர்ச்சி பெறும் மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மூன்று வருடங்களுக்கு முன்னர், அன்னை பூபதி நினைவான பொது அறிவுத் தேர்வை முதற் தடவையாக நாம் அறிமுகப்படுத்தியபோது, 3, 500 மாணவர்கள் மட்டுமே இதில் தோற்றினர். அடுத்த ஆண்டில்7,000 பேராகி, சென்ற ஆண்டில் 15, 500 பேராகிய இத்தொகை, இந்த ஆண்டில் ஒரு இலட்சம் பேராக அதிகரித்துள்ளது என்பது, சொலில்க் காட்டத் தக்கது. இத்தேவிர்ல் பங்கேற்க வேண்டும் என்ற அக்கறையும், தங்களது பொது அறிவை வளர்த்தெடுக்க வேண்டுமென்ற ஆர்வமும், மாணவர்கள் மத்தியில ஒரு உற்சாக அலையாக எழுந்துள்ளதைத் தற்பொழுது காணக் கூடியதாக உள்ளது.

இளம் மாணவ சமூகத்தின் பரந்த உலகப் பார்வைகொண்ட இந்த ஊக்கத்தையும் அவாவையும் கருத்திலெடுத்துக்கொண்ட எமது இயக்கத்தின் கல்விக் கழகம், இதனை ஒரு அலகாகத் தனது வேலைத்திட்டத்தில இணைத்துக்கொண்டுள்ளது. எமது மாணவர்களது அறிவுத் தேடலுக்கு உரம் சேர்த்து - உறுதுணையாக நிற்க அது திடசங்கற்பம் பூண்டுள்ளது.

எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கும் பிராந்தியங்களில உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பொது அறிவு, பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. கலவித் திணைக்களத்தினூடாக, கல்விப் பணிப்பாளர்களது ஒத்துழைப்புடன் இந்த ஏற்பாட்டொழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ஆண்டு ரீதியாக நடைபெறும் பருவகாலப் பரீட்சைகளிம் ஒரு பாடமாகப் பொது அறிவும் இணைகிறது.

அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுத் தேர்வானது, இவற்றிலிருந்து பிரத்தியேகமான ஒன்றாக- சிறப்புத் தேர்வாக - வருடந்தோறும் நடைபெறும். ○

## அன்றும் இன்றும்

அன்று-

சிறிலங்கா அனுப்பும் இராணுவ அதிகாரிகளை இங்கு காண வேண்டுமா? அல்லது கொழும்பில் அமைச்சர்களையோ, தலைமைப் பீடங்களையோ தரிசிக்க வேண்டுமோ? இதைச்செய்துகொடுக்க இங்கு சிலர் இருந்தார்கள்! இவர்கள் ஆட்சிக்கு வரும் கட்சியின் அடிவருடிகளாக இருந்தார்கள். வெளிப்பார்வைக்கு செல்வாக்குடன் இருந்தார்கள்!

குறிப்பிடும் காசுடன் ஆளும் கட்சியைப் புகழ்வதும் தமிழினத்தை இகழ்வதும் இவர்கள் சொல்லாமற் செய்யப்படவேண்டிய துதி!

இன்று?

இந்தத் தரகர்களும் துரோகப் பிரமுகர்களும் இங்கில்லை! இவர்களின் எச்சங்கள் துரோகக்கும்பல்களாக தூரத்து வழிதெருவிலும் எதிரிகள் நிலைத்துள்ள இராணுவ முகாம்களிலும் பிழைத்து வருகின்றன!

அன்று- இனத்துரோகிகள் அரசியற் பிரமுகர்களைப் போல இங்கு இருந்தார்கள!

இன்று- எடுபிடிகளாயும் எச்சில்நாய் வடிவிலும் இங்கு எம்மத்தியிலும் அல்ல, அப்பால சிங்கள இராணுவ நிழலில்!

தாத்தா இதனை ஒப்பிடுகிறார்.

(உண்மை நிகழ்விலிருந்து) ○

# விஜேதுங்காவின் ஒரு வருட ஆட்சி

## ஒரு பார்வை

தொடர்ச்சியான இராணுவத் தோல்விகளையும் நீண்டதொரு அரசியல் மந்த நிலையையும் கொண்ட ஒரு காலப்பகுதியாக, விஜேதுங்காவின் ஒரு வருட ஆட்சி கரைந்துள்ளது. மண்கிண்டிமலை இராணுவ முகாம் அழிப்புடன் தொடங்கி, பூநகரி கூட்டுத்தளம் மீதான பெருந் தாக்குதல்வரை, இந்த ஒரு வருடத்தில் சிங்களப் படைகள் அடுத்தடுத்துப் பெருந்தோல்விகளையும் - உயிர் இழப்புகளையும் சந்தித்தன. அதே வேளை சிறீலங்காவின் அரசியல் அரங்கிலும் வெறுமையையும் - சலிப்பையும் ஏற்படுத்தும் வகையில் ஒருவித மந்த நிலையே காணப்பட்டது.

1993ஆம் ஆண்டு 'மே' நாளிலன்று சிங்கள தேசத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்திய பிரேமதாசாவின் சாவுடன் சிறீலங்காவின் ஜனாதிபதி பதவியில் இருத்தப்பட்ட திரு. விஜேதுங்கா, இந்த ஆண்டு (1994) 'மே' நாளுடன் தனது ஒரு வருட ஆட்சிப் பூர்த்தியைக் கொண்டாடியுள்ளார்.

பதவியேற்றவுடன் சமரசவாதத்தையும், சில மாதங்கள் கடந்ததும் பேரினவாதத்தைக் கக்கியபடியும் ஆட்சியைத் தொடங்கிய விஜேதுங்கா, ஒரு வருட ஆட்சியின் இறுதிப்பகுதியை, தனது பதவியைப் பாதுகாக்கும் இலக்குடன் காய்களை நகர்த்துவதிலேயே செலவிட்டார்.

இந்த ஓராண்டு ஆட்சியின்போது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எந்தவொரு அரசியல் - பொருளாதார - சமூக சாதனைகளையும் விஜேதுங்கா படைக்கவில்லை. இதற்கு மாறாக சிறீலங்கா அரசாங்கத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் அவர், இகழ்ச்சியையும் அவமரியாதையையும் பொருளாதாரப் பின்னடைவையுமே ஈட்டிக்கொடுத்துள்ளாரென்பதை, நடுநிலைமையான சிங்கள விமர்சகர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

இந்த ஒருவருட ஆட்சிக்காலத்திலும், சிங்கள தேசத்தில் பெரியளவில் எந்தவொரு அபிவிருத்தித் திட்டமோ அல்லது சமூக சீர்திருத்தத் திட்டங்களோ ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பதிலாக பெருந்தொகைப் பணச்செலவில் படைத்துறைக்கு ஆயுத தளபாடங்கள் வாங்கப்பட்டதும் சகல வளங்களும் போர்த் தேவைக்கெனத் திருப்பிவிடப்பட்டதும் தான் ஒழுங்காக நடந்தன. இதிலும் ஊழலும்-மோசடியும் மலிவாக நடந்துள்ளன.

புலிகளைப் போரில் தோற்கடிப்பது மட்டும் தான் தனக்கிடப்பட்ட பணி என நினைத்த விஜேதுங்கா அவர்கள், அல்லும் பகலும் புலி எதிர்ப்புக் கூச்சல் போடுவதிலும் சிங்கள மக்களுக்குப் போர்வெறியூட்டுவதிலுமே தனது நேரத்தைச் செலவிட்டார்.

பரபரப்புடன் தொடங்கப்பட்ட 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை படுதோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து, தனது படையினர்மேல் சிங்கள மக்கள் வைத்திருந்த அதீத நம்பிக்கையும் உடைந்தது அது பின்னர் பூநகரித் தோல்வியுடன், புலிகளை 'போரில் வெல்ல முடியாது' என்ற நிலைப்பாட்டிற்கு சிங்கள மக்களையும் - உலகையும் இட்டுச்சென்றுவிட்டது.

இதன் விளைவை தென்மாகாணசபைத் தேர்தலில் சிங்கள மக்கள் காட்டியிருந்தனர்.

தீவிரமானமுறையில் போரை முன்னெடுத்துச் செல்லவும். இனப் ரச்சினைத் தீர்வுக்கு போர்தான் மருந்து என்று கூறியும், இந்தக் கொள்கையைத் தொடர்ந்தும் முன்னெடுக்க ஐ. தே கட்சி அரசு மக்களிடம் ஆணை கேட்டிருந்தபோதும், தென்மாகாண வாக்காளர்கள் அதை நிராகரித்தனர்.

சிங்கள மக்களின் அரசியல் தீர்ப்புக்குத் தலைசாய்த்து இனப்பிரச்சினை தொடர்பான தமது கொள்கைகளை ஐ. தே. கட்சி அரசு இதுவரை மாற்றவேயில்லை.

விஜேதுங்கா அவர்கள் ஜனாதிபதிப் பதவியேற்ற ஆரம்ப நாட்களில் வெளிப்படுத்திய பேச்சுவார்த்தைக்கான விருப்பிற்கு பாலம் அமைக்க, பல சமாதானத் தூதுக்குழுக்கள் கொழும்பிலிருந்து யாழ் வரத் தொடங்கின. வந்த சமாதானக் குழுக்கள் புலிகளின சமாதானச் செய்திகளுடன் கொழும்பு செல்ல முன்னரே, விஜேதுங்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, சமாதானத்தின் விரோதியாக மாறிவிட்டார். யாழ். வந்து - புலிகளின் சமாதானச் செய்திகளுடனும் நல்லெண்ணச் சமிக்ஞைகளுடனும் கொழும்பு திரும்பிய சமாதானக் குழுக்கள், கொழும்பில் உள்ள பேரினவாதப் பத்திரிகைகளின் வசைகளுக்கும் - அவமதிப்புகளுக்கும் ஆளாக்கப்பட்டார்கள். இதன் விளைவாக, உலக சமூகம் எமது விடுதலைப் போராட்டம் தொடர்பான சில உண்மைநிலைகளை விளங்கிக்கொண்டது.

புலிகளின் தலைமை சமாதானத்திற்குத் தயாராக இருக்கின்ற அதேவேளை சிறீலங்கா அரசு அதற்குச் செவிமடுக்காது, தொடர்ந்தும் போர்ப்பாதையையே நாடுகின்றது என்பதையும்; ஒரு சமாதான முயற்சிக்கு ஆக்கமும் - ஊக்கமும் கொடுத்து அரசை உற்சாகப்படுத்தவேண்டிய பத்திரிகை உலகமும் - சிங்களப் புத்திஜீவிகள் வட்டமும் பேரினவாத உணர்வுடனும் - குறுகிய அரசியற் பார்வையுடனும் தமிழரின் இனப்பிரச்சினையை அணுகி. தீவை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்க உதவுகின்றனர் என்ற கசப்பான - ஆனால் நீண்ட காலமாக இருந்துவரும் - ஒரு உண்மையயும் சர்வதேச உலகம் கணிசமான அளவுக்குப் புரிந்துகொண்டுவிட்டது.

இவை எமது போராட்டத்தின் நியாயத்தைச் சர்வதேச அரங்கில் வலுப்படுத்த உதவியுள்ளன.

பேரினவாதப்பேசி, தமிழருக்கெதிரான போரைத் தீவிரப்படுத்தி, அதன்மூலம் சிங்கள மக்களை அவர்களது சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்பி, சுலபமாக சிங்கள தேசத்தின் தலைவனாக இருந்துவிடலாம் என்ற விஜேதுங்காவின் திட்டம், அவர் நினைத்த அளவுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுக்கவில்லை. மாறாக, ஓருவருடகால ஆட்சிக்குள்ளேயே சிங்கள மக்களிடமிருந்தும் அதேவேளை அவரது தலைமைக்கு எதிராக அவரது கட்சிக்குள்ளிருந்தும், எதிர்ப்புகுரல்கள் எழத் தொடங்கிவிட்டன.

1988ஆம் ஆண்டு, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் விஜேதுங்கா அவர்களுக்கு பிரதம மந்திரிப் பதவியை அளித்தபோது ''இது என்னால் நம்பமுடியாத செய்தி'' என விஜேதுங்கா வாய்விட்டுக் கூறியிருந்தாராம்.

மேதின ஊர்வலத்தில் நிகழ்ந்த பிரேமதாசாவின் துரதிர்ஷ்டம் விஜேதுங்காவுக்கு அதிர்ஷ்டமாக மாறி ஜனாதிபதிச் சிம்மாசனம் கிடைத்தவுடன், மேற்குறித்த வார்த்தையையே விஜேதுங்கா மனதுக்குள் பலதடவை சொல்லியிருப்பார்!

ஜனாதிபதிப் பதவியேற்ற ஆரம்ப நாட்களில் விஜேதுங்கா அவர்கள், கட்சி அரசியலுக்கு அப்பால் ஒரு கூட்டரசின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்போல, எதிர்க்கட்சியினது பேச்சையும் கேட்டு ஆட்சியை ஓட்ட நினைத்தார். இது விஜேதுங்காவின் தலைமைப் பண்பையோ அல்லது அவரின் அரசியல் முதிர்ச்சியையோ எடுத்துக்காட்டவில்லை. தனது புதிய பதவிக்குச் சவால்கள் ஏதும் இல்லாது பதவியைக் காப்பாற்றும் ஒரு தந்திரோபாயமாகவே அந்த அணுகுமுறையை விஜேதுங்கா தேர்ந்தெடுத்திருந்தார்.

இது ஒருபுறமிருக்க, சிங்களத் தலைவர்களின் வரலாற்றை எடுத்துக்கொண்டால, விஜேதுங்காவைப்போல தமது உண்மை முகத்தை ஒளிவு மறைவின்றிப் பச்சையாகவே காட்டிய தலைவர் வேறு எவரும் இல்லை. மற்றெல்லாத் தலைவர்களும் நேரத்திற்கு நேரம் - காலத்திற்குக் காலம் - ஜனநாயக மற்றும் அகிம்சைவாத முகமூடிகளை அணிந்தபடி பேரினவாத ஆட்சி நடாத்தினர்.

இந்த ஒருவருட ஆட்சியின் ஆரம்பத்தில் விஜேதுங்கா அவர்களும் சமரசவாத முகமூடியை அணிந்துகொண்டபோதிலும் வெகுவிரைவில் அதைக் சழற்றி எறிந்துவிட்டு தனது உண்மை முகத்தை - பேரினவாத முகத்தை - வெளிப்படையாகவே காட்டினார். விஜேதுங்காவின் இந்த வெளிப்படைத் தன்மையை சிங்கள தேசத்து பத்திரிகை உலகமும் பாராட்டி, தனது பேரினவாத நிலைப்பாட்டை உலகிற்குத் தெரிவித்துவிட்டது.

இந்த ஒருவருட காலத்தில் விஜேதுங்கா அவர்கள், ''இனப்பிரச்சினை இங்கில்லை; இருப்பது பயங்கரவாதப் பிரச்சினைதான்'' என்றும்; ''சிறுபான்மை இனமக்கள் செடி கொடிகளைப் போன்றவர்கள், அவை பெரிய மரத்தின்மீதே (பெரும்பான்மை இனம்) படரவேண்டும்'' என்றும் கூறி, தன்னைத் தானே ஒரு இனவாதியாக உலக அரங்கில் நிரூபித்துக் கொண்டதுதான் அவர் கண்ட மிச்சம்.

அதேவேளை, 'இங்கு இருக்கும் பிரச்சினையைப் பயங்கரவாதப் பிரச்சினை என்று சரியாக இனங்கண்ட பெருமை விஜேதுங்காவைச் சாரும்' என்று, கொழும்புப் பத்திரிகைகள் டி.பிக்கு புகழாரம் சூட்டியுள்ளன.

விஜேதுங்காவின் தலைமைத்துவத்தைப் புகழ்பவர்கள், தமிழின விடுதலைப் போருக்குப் பயங்கரவாதப் பட்டம்சூட்ட அவர் எடுத்துவரும் இடையறாத முயற்சியை உதாரணம் காட்டுகின்றனர்.

அவரின் தலைமைப் பண்பை இகழ்பவர்களும் அதையே உதாரணமாகக் காட்டுகின்றனர். ○

### ஒரு வருட பூர்த்தியில் ஜனாதிபதி விஜேதுங்கா

''நாட்டை வழிநடத்தும் பொறுப்பை பணிவோடு ஏற்றுக்கொள்கிறேன்.'' இது 71 வயதை அடைந்த திரு. டி பி. விஜயதுங்கா சிறீலங்காவின் ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக்கொண்டபோது கூறிய வார்த்தை. விசுவாசத்திற்கும் பணிவுக்கும் உரியவர் என்ற நம்பிக்கையை இவர், முன்னைய ஜனாதிபதி பிரேமதாசாவிடம் பெற்றிருந்தார். அதனாலேயே சாதாரண அமைச்சராக இருந்த இவர் பிரேமதாசாவால் பிரதம அமைச்சர் என்ற பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1.05.1993 மேதினமும் வந்தது. பிரேமதாசா குண்டுவெடிப்புக்குப் பலியாகியதால் விஜேதுங்கா ஜனாதிபதியானார் ஒருமாதம் கழியவில்லை - அதற்குள், ''முன்னாள் ஜனாதிபதிபோல நானும் மக்கள் மத்தியில் செல்வேன். ஆனால் எனது கையில் என்றும் இரத்தக்கறை படிந்ததில்லை'' என்றார் இவர். இவ்விதம் தனது விசுவாசத்தையும் - பணிவையும் வெளிக்காட்டினார்!

1993 யூன் மாதம் பாரிஸில் நடைபெறும் நிதி உதவும் நாடுகளின் மாநாட்டிற்கு சில நாள் முன்னதாக, இலங்கையிலுள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கான விருந்துபசாரமொன்று கொழும்பில் நடைபெற்றது. ''நாடு முழுவதும் சமாதானம் நிலவ வேண்டும்'' எனப் பேசினார் ஜனாதிபதி விஜேதுங்கா. பாரிஸ் மாநாட்டில் பொருளியல் வளர்ச்சிக்கென வேண்டிய உதவியும் கிடைத்தது. ஆனால் நடந்தது என்ன? ஒரு நாட்டிலிருந்து மட்டும் 500 கோடி ரூபா ஆயுதக் கொள்வனவு நடைபெற்றது. இவ்விதம் பல கொள்வனவுகள் நடைபெறுகின்றன:

எத்தனையோ மனித உரிமை மீறல்களும் முப்படைத் தாக்குதல்களும் நிலப்பறிப்புக்களும் ஆக்கிரமிப்புக்களும் தமிழ் மக்கள்மீது சிறீலங்கா அரசால் நடத்தப்படுகின்றன. அகிம்சை வழி முடிந்து, வேறுவழியின்றி ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆயுதப் போர் தமிழீழத்தில் நடைபெறுகிறது. இதற்கு ''பயங்கரவாதம்'' என்பது இவரது பிரச்சாரம். பிலிப்பைன்ஸ், மலேசியா ஆயர்கள், வெளிநாட்டு நல்லெண்ணக் குழுக்கள் வந்தன; நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர், அயர்லாந்தர், பெல்ஜியத்தவர், நெதர்லாநதர் முயன்றனர்; அமெரிக்க அமைப்புக்கள் முயன்றன; நோர்வே அரசாங்கம் முயன்றது; கனடாவின் மத்தியஸ்தர்கள் உட்பட பலரும் முயன்றனர். யாவரும் வடக்கு கிழக்குப் பிரச்சினையை சமாதானமாய்த் தீர்க்கவே வந்தனர்.

''நிபந்தனையற்ற பேச்சுக்கு எப்பொழுதுமே தயார்'' என்பதைத் தொடர்ந்துவலியுறுத்தி வந்துள்ளனர் விடுதலைப் புலிகள் இதன் அடையாளம் போல இவர்கள்சிங்களப் போர்க் கைதிகள்சிலரையும் விடுதலை செய்துள்ளனர் ஆனால் டி.பி. விஜயதுங்காவோ சமாதானக் குழுக்களைப் பார்த்து ''இவை வெளிநாட்டினரின் அந்நியத்தலையீடு'' எனத் தனது கதவை இறுகச் சாத்திவிட்டார்! சிங்கள பௌத்த பேரினவாத கூச்சலையே தனது பிரச்சாரமாக்க முயலுகிறார்.

மண்கிண்டிமலையிலும் - கிளாலியிலும் - பருத்தித்துறைக் கடலிலும் - புலோப்பளையிலும் - பூநகரியிலும் புலிகளிடம் பெற்ற பெருந்தோல்விகளிலிருந்து விடுபடா நிலையில், சிறீலங்காப் படையணி நிற்கிறது!

ஐ. தே. கட்சியின் உட்பூசல் இழுபறி பகிரங்க விடயமாகிவிட்டது. போர்க்கைதிப் பரிமாற்றம் தந்த வடுக்கள் வேறு.

இவை மட்டுமா? தென்மாகாணசபைத் தேர்தலும் படுதோல்வியில் முடிந்தது! இது ஆளும் கட்சிக்குக் கிடைத்த பகிரங்க அவமானம்!

மே தினத்தன்று, ஆளும்கட்சிகள் தங்கள் செல்வாக்கை வெளிக்காட்ட நடாத்தும் மாபெரும் ஊர்வலங்களும் பொதுக்கூட்டமும் இம்முறை, ஆட்சியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியால் கைவிடப்பட்டுள்ளது! இது மறைந்த பிரேமதாசாவுக்கான அஞ்சலியா? அப்படியானால், அந்த மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் சிலைத் திரைநீக்க வைபவத்திற்கும் இன்றைய ஜனாதிபதி விஜயதுங்கா போகாமலிருந்தது ஏனோ?

இதுதான் இந்த ஒரு வருட முடிவின் நிலை! இந்த நிலையில் இனிவரப்போகும் தேர்தலில் தனது பதவியை எவ்விதம் காப்பது? இது டி. பி. விஜயதுங்காவுக்குரிய முதற்கேள்வியாய் இருப்பது இயல்பே! ○